Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 224 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 24, திங்கள் 08.07.2013

**இந்தியா**



பக். 06

புத்தகாயாவில் தொடர் குண்டு வெடிப்புகள்

**உலகம்**



பக். 07

முடிவுக்கு வராதவன்முறைகள்

**விளையாட்டு**



பக். 23

விம்பிள்டன்: பர்டோலி சம்பியன்

### சிங்கள மீனவர்களை வெளியேற்றக் கோரி

# முல்லையில் மீனவர்கள் இன்று உண்ணாவிரதம்

முல்லைத்தீவு, ஜூலை 8
முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் 600 க்கும் மேற்பட்ட சிங்கள மீனவர்களை உடனடியாக வெளியேற்றக் கோரியும் – சட்விரோதமீன்பிடிமுறைகளை தடைசெய்யக் கோரியும் – முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் இன்று மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்புகளின் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு எதிரே நடைபெறவுள்ளது. இதில் 4 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.



இது குறித்து முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் சி.அருள்ஜெனிபேர்ட் தெரிவித்ததாவது:

தொடர்ந்தும் எமது பகுதியில் உள்ள மீன்களை அத்துமீறி தென்பகுதி மீனவர்கள் பிடித்துச் செல்கின்றனர். இது குறித்து பலமுறை உரியவர்களிடம் முறையிட்டும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. இதனாலேயே உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க முடிவுசெய்துள்ளோம். மாத்தளன் தொடக்கம் கொக்கிளாய் வரையிலான கரையோரப் பகுதி மீனவர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ள உள்ளனர். போராட்டத்தின் முடிவில் மாவட்ட செயலகத்தின் ஊடாக கடற்றொழில் அமைச்சருக்கும், முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதிக்கும் எமது கோரிக்கைகள் அடங்கிய மனு கையளிக்கப்படவுள்ளது – என்றார்.

''எதற்காக முல்லைத்தீவு இராணுவத் தளபதிக்கு மனு?''என்று வினவியபோது, ''படையினரின் துணையோடு தானே நாயாற்றில் தென்பகுதி மீனவர்கள் குடியேற்றப்பட்டு இத்தகைய அத்துமீறிய மற்றும் சட்டவிரோத மீன்பிடிகளில் ஈடுபடுகிறார்கள். அதனை நிறுத்துமாறு கோரியே முல்லைத்தீவு இராணுவத் தளபதிக்கும் மனுவை அனுப்புகிறோம்.'' என்று அவர் பதிலளித்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை படைத்தரப்பு தொடர்ச்சியாக மறுதலித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ஙு)

## தமிழினி வெளிநாடு செல்வார்?



கொழும்பு,ஜூலை 8
விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, மிக விரைவில் திருமணம் முடித்து ஐரோப்பிய நாடொன்றில் குடியேறவுள்ளதாக லங்காபுவத் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஐரோப்பாவிற்கு இடம்பெயர்ந்த வர்த்தகர் ஒருவரே தமிழினியைத் திருமணம் முடிப்பதற்கு முன்வந்துள்ளார்.

இதன் காரணமாகவே வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்தும் தமிழினி கடைசி நேரத்தில் விலகிக் கொண்டுள்ளார் என்றும் அந்தச் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ)

## வெளிநாட்டு ஊடகவியலாளர் மீது கண்காணிப்பு கடுமையாக்கப்படும்

கொழும்பு,ஜூலை 8
பொதுநலவாய மாநாட்டு அமர்வின் போது செய்தி சேகரிப்பில் ஈடுபடும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்துவிடலாம். எனவே இவர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், மாநாடு குறித்த செய்திகளை சேகரிப்பதற்காக 700க்கும் மேற்பட்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

உள்நாட்டு ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்கள் உள்ளடங்கலாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மாநாட்டின்போது செய்தி சேகரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு விசா வழங்கும் நடவடிக்கை அடுத்த வாரமளவில் ஆரம்பமாகும் என அவர் தெரிவித்துள்ளார். சில ஊடகவியலாளர்

தொடர்ச்சி: பக்கம் 21

## இந்திய அரசின் நிபந்தனைகளை சொல்ல மறுக்கிறார் பஸில்

கொழும்பு,ஜூலை 8
13வது திருத்தம் தொடர்பாக இந்தியா விதித்த நிபந்தனைகள் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வாய் திறக்க மறுத்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தியப் பயணம் குறித்து பஸிலிடம் வினவியபோது,

கணவன் மனைவிக்கு இடையில் உள்ளது போல, சில விடயங்களை இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் பதில் அளித்துள்ளார்.

'13'ஆவது திருத்தத்தைப்

தொடர்ச்சி: பக்கம் 21

## இலங்கையின் சர்வாதிகாரத்தை பொதுநலவாயம் ஏற்கிறதா?

### கேள்வி எழுப்புகிறார் மங்கள

கொழும்பு,ஜூலை.08
இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் கொள்கைகளும் கோட்பாடுகளும் பின்பற்றப்படுவதில்லை. சர்வாதிகார முறைமையிலான ஆட்சியே நடக்கிறது. இதனை பொதுநலவாய நாடுகள் அங்கீகரிக்கின்றனவா. இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

இது தொடர்பில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவிற்கு, மங்கள சமரவீர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு,

இலங்கையில் சர்வாதிகாரமே தலைதூக்கியுள்ளது. மனித உரிமைகள் மீறப்படுகின்றன.இந்த நிலையில் பல்வேறு எதிர்ப்புக்களையும் மீறி பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது சர்வாதிகாரத்தை பொதுநலவாய நாடுகள் அமைப்பு அங்கீகரிப்பதாகவே அர்த்தப்படும்.

தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்பை இன்று சந்திப்பார் மேனன்

கொழும்பு, ஜூலை 8
அரசமைப்பின் '13'ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியப் பிரதமரின் முக்கிய செய்தியுடன்இன்று இலங்கை வரும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வந்த கையோடு மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அதன் பின்னர் நாளை செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட அரசின் உயர்மட்ட பிரமுகர்களை அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.



அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் சிவ்சங்கர் மேனன் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட '13'ஆவது திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொள்ள இலங்கை அரசு

தொடர்ச்சி: பக்கம் 21

## புத்தகாயா போகவேண்டாம்

### –அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 8
இந்தியாவில் பீகார் மாநிலத்தில் பௌத்தர்களின் புனிதத் தலமான புத்தகாயாவில் நேற்று நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்புகளின் எதிரொலியாக இலங்கை யாத்திரிகர்களை அங்கு செல்ல வேண்டாம் என்று அரசு அறிவித்துள்ளது. இன்னும் ஒரு வாரத்துக்கு இந்த அறிவிப்பை பயணிகள் கருத்தில் கொண்டு யாத்திரையை ஒத்திவைக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. (ஙு)

# வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக தமிழர் இருப்பதற்கு புலிகளே காரணம்

## ஆதங்கப்படுகிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, ஜூலை 8

இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' தான் புலிகளின் தலைவர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்கி அவர்களை பலமிக்க சக்தியாக மாற்றியது. 13ஆவது திருத்தத்தை முற்றாக ஒழிப்பதன் மூலமே அதிகாரப் பரவலுக்கான முன்னேற்றத்தை அடைய முடியும் என்று தெரிவித்துள்ளார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''தேசிய பாதுகாப்பு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன சரியான முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை. இந்தியாதான் போராளி குழுக்களை வளர்த்து விட்டது. பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கியது. இந்திய புலனாய்வு அமைப்பான றோ – புலிகளின் தலைவர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்கியது.

இதற்குக் காரணம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் இந்தியா நட்புறவு இல்லாதது தான். இந்திரா காந்தியுடன் அவருக்கு நெருக்கம் கிடையாது. அதன் விளைவுதான் போராளிகளின் வளர்ச்சி, விடுதலைப் புலிகள் மிகப் பெரிய இயக்கமாக உருவாக அவர்தான் காரணம்.

ஒரு நாடு இரண்டு அரசுகள்

நான் பாதுகாப்பு செயலாளராக பதவி ஏற்ற காலத்தில் இந்த நாட்டில் இரண்டு அரசுகள் இருந்தன. ஒன்று மக்கள் தெரிவு செய்தது. மற்றது பிரபாகரனுடையது. வடக்கிலும் கிழக்கிலும் அவரது ஆட்சி, பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், வங்கிகள், அஞ்சலகம் என்று ஒரு தேசத்திற்கான கட்டுக்கோப்பை உண்டாக்கி புலிகள் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரேநாளில் 22 விமானங்களை இழந்தோம்

கடந்த 30 வருடங்களாக இந்த வாய்ப்புக்களை நாம் தவறவிட்டு விட்டோம். மற்ற நாடுகள் நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கும்போது போர் செய்து கொண்டிருந்ததால் நமது முன்னேற்றம் மோசமான முறையில் பாழடைந்தது. ஒருநாளில் 22 விமானங்களை இழந்தோம். இது எப்படிப்பட்ட நஷ்டம்? வெளிநாட்டு பயணிகள் வருகை, மீன்பிடித் தொழில் என்று அனைத்திலும் நாம் நஷ்டமடைந்தோம். முதலீட்டாளர்கள் இங்கு வரவே அஞ்சினார்கள்.

சகஜ நிலைமை இருந்திருந்தால் அதிக எண்ணிக்கையான சிங்களவர்கள் அங்கு இருந்திருப்பார்கள். நான் யாழ்ப்பாணத்தில் இரண்டாவது லெப்டினன்ட்டா கடமை புரிந்தபோது அதிக அளவில் அங்கு சிங்களவர்கள் வாழ்ந்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் சிங்கள மக்கள் பலர் வாழ்ந்தனர்.

வடக்கு–கிழக்கில் தமிழர் 98 வீதமாக இருப்பதற்கு புலிகளே காரணம்

இப்போது எங்கே அவர்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? புலிகள் அவர்களை விரட்டி விட்டார்கள். அவர்களது எண்ணிக்கை குறைந்தது மட்டுமன்றி மீண்டும் வரவேயில்லை. இது எந்தளவு நியாயம்? உதாரணமாக திருகோணமலையை எடுத்துக்கொள்ளுங்கள். 80ஆம் ஆண்டுக்கு முன்னர் திருகோணமலையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது அங்கு சிங்கள மக்கள் சிறுபான்மையினராக இருக்கின்றனர். இந்த நிலைமை யாரால் ஏற்பட்டது. விடுதலைப் புலிகளின் தந்திரத்தினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. போர் சூழ்நிலை மட்டும் ஏற்படவில்லை என்றால் 78 வீதமாக இருக்கும் சிங்கள மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் அதே விகிதாசாரத்திலேயே இருந்திருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு வட, கிழக்கு நிலப்பரப்பில் தமிழர்கள் மட்டும் 98 வீதமாக இருப்பது என்ன நியாயம்?

இப்போது போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதால் இயல்பு வாழ்க்கைக்குரிய சூழல் திரும்பியுள்ளது. இந்தச் சமயத்தில் 'அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக இல்லாதொழிக்க விரும்புகின்றேன். அதுதான் முன்னேற்றத்திற்கு வழி. அதிகார பரவலாக்கலுக்கு நான் எதிரானவன் அல்ல. ஆனால் அது பயனுள்ளதாகவும் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதைவிடுத்து, இனவாரியாக பிரதேசங்களை பிரித்துப் பார்க்கக் கூடாது' –என்று கூறியுள்ளார்.

(ங)

## 'போஸ்டர் யுத்தம்' தற்போதே ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 8

பிரதான அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதற்கு முன்னரே தேர்தல் களத்தில் 'போஸ்டர் போர்' மூண்டுள்ளது.

வடமேல், வடக்கு, மத்திய ஆகிய மூன்று மாகாணங்களுக்கு தேர்தல் நடைபெற்றாலும், மத்திய மாகாணத்தில் வேட்புமனுத் தாக்கல் திகதி அறிவிப்புக்கு முன்னரே பிரசாரப் பணிகள் சூடுபிடித்துள்ளன.

அதிலும் குறிப்பாக, 'போஸ்டர்கள்', 'கட்–அவுட்கள்' ஆகியன தற்போதே பெரும் செலவில் தயாரிக்கப்பட்டு ஆங்காங்கே கட்டப்பட்டும், தொங்கவிடப்பட்டும் உள்ளன. இதனால் தேர்தல் திருவிழா மலைநாட்டில் களைகட்ட ஆரம்பித்துள்ளது.

அதேவேளை, பெருமளவு செலவில் கட்டப்பட்ட போஸ்டர்கள் சில கிழித்தெறியப்பட்டுள்ளதையும் கண்டி மாவட்டத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

வடமேல், மத்திய மாகாணங்களில் இம்முறை முக்கிய சில அமைச்சர்களின் மகன்மார்கள் களமிறங்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நடைபயணம் நேற்று முடிவுற்றது பருத்தித்துறையில்

வடமராட்சி, ஜூலை 8

வடக்கு, தெற்கில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவையை அதிகரிக்க நடைப்பயணம் மேற்கொண்டு நிதி சேகரித்த குழுவினர் நேற்று முற்பகல் 11 மணியளவில் பருத்தித்துறையை வரவேற்புக்கு மத்தியில் வந்தடைந்தனர்.

தென்பகுதியைச் சேர்ந்த மேஜர் நுவான்ரணதுங்கா என்பவர் தெய்வேந்திரமுனையில் இருந்து தனது உறவினர், நண்பர்கள் சகிதம் பருத்தித்துறை முனையை நோக்கி ஆரம்பித்த 447 கிலோ மீற்றர் நடைபயணம் 38 நாள்களுடன் நேற்று பருத்தித்துறையுடன் நிறைவுற்றது.

நுவான் ரணதுங்காவுக்கும் குழுவினருக்கும் பருத்தித்துறை நகரில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சட்டத்தரணி சபாரவீந்திரன், உபதலைவர் சி.பத்மநாதன், நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் எஸ். அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். படை அதிகாரிகள், பொலிஸார், பொது மக்களும் இதில் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை நகர சபை உப தலைவர் சி.பத்மநாதன், நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் அகிலதாஸ் ஆகியோர் ரணதுங்காவுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

வர்த்தகர்களும் பொது மக்களும் இந்த நடைபயணத்துக்கு நிதி உதவிகளை வழங்கினார்கள். (ஒ–8)

## தென்மராட்சி உயர்தர மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 8

தென்மராட்சி வலய ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சைக்கு இந்த முறை தோற்றவுள்ள விஞ்ஞான மற்றும் கலைப்பீட மாணவர்களுக்கான கருத்தமர்வு நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தமர்வு தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ–4)

## 'ஒட்டக - புலி' கூட்டணியால் வடக்கில் அரசுக்குச் சவால்

### சிங்கள மக்களா? இந்தியாவா? உடன் தீர்மானிக்குமாறு மஹிந்தவுக்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 8

ஆட்சியில் அமர்த்தி அழகு பார்த்த சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதா அல்லது புலிகளை வளர்த்து விட்ட இந்தியாவைத் திருப்திப்படுத்துவதா என்பதை ஜனாதிபதி உடன் தீர்மானிக்கவேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.



அத்துடன், வடமாகாண சபைத் தேர்தல் களத்தில் 'ஒட்டக- புலி' கூட்டணி அரசுக்கு சவாலாக விளங்கும் என்றும், எனவே, அரசு தேர்தலை அரசியல் யுத்தமாகவே கருதவேண்டும் என்றும் அவ்வியக்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும்வரை வடமாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதியிடம் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், செப்டெம்பரில் தேர்தலை நடத்துவதற்கான கட்டளையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவ்வமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிட்டே வடக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சிங்கள அமைப்புகள் ஒருமித்த குரலில் அரசிடம் விடுத்தன. எனினும், அரசு இதற்கு செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி ஆட்சிபீடமேறுவதற்கு சிங்கள மக்களின் ஆணை உறுதுணையாக இருந்தது. ஆகவே, திருத்தங்களின்றி வடக்குத் தேர்தலை நடத்தும் மனதை ஜனாதிபதி கஷ்டத்துக்குள்ளாக்கக் கூடாது. ஆட்சிபீடமேறவைத்த சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதா அல்லது இந்தியாவைக் குஷிப்படுத்துவதா? இரண்டில் ஒன்றை ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும். குறிப்பாக, சிங்கள மக்களைப் பகைத்துக்கொள்ளும் அரசுக்கு இந்த நாட்டில் ஆட்சிபீடமேறுவது கடினம் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைவரம் புடம்போட்டுக் காட்டுகின்றது. இதைக் கூட்டணி அரசு உணர்ந்து செயற்படவேண்டும்.

அதேவேளை, அரசின் பங்காளியாக இருக்கும் மு.கா. வடக்கில் தனியாகப் போட்டியிடவுள்ளது. இறுதியில் மரம் கூட்டமைப்பின் பக்கம் சாயலாம். எனவே, 'ஒட்டக- புலி' கூட்டணி குறித்து அரசு அவதானத்துடன் இருக்க வேண்டும் – என்றார்.

## பாட்டுப் பாடும் யானை ஒன்றும் அரசு பக்கமே

### அமைச்சர் விமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

''பாட்டுப் பாடும் யானையொன்றும் அரசு பக்கம் பாயவுள்ளதே..'' – என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணைந்து மாகாணசபைத் தேர்தலில் முக்கிய பதவிகளுக்காகப் போட்டியிடவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், அரசுடன் இணையவுள்ள ஐ.தே.க. உறுப்பினர்களுள் முக்கிய நபர் என்பதை மக்கள் தெரிந்து கொள்வதற்காக அமைச்சர் விமல் வழங்கியுள்ள பூடகமான தகவலே 'பாட்டுப் பாடும் யானை' என்பதாகும்.

அத்துடன், மேலும் சில முக்கிய யானைகளும் அரசுடன் இணையவுள்ளன என்றும் அமைச்சர் விமல், நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டினார்.

பிரபல தொலைக்காட்சியில் அண்மையில் நடைபெற்ற 'மெகா ஸ்டார்' என்ற பாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறந்த பாடல்களைப் பாடிய ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இறுதிப்போட்டி வரை தெரிவானார் என்பது குறிப் பிடத்தக்கது.

## தஞ்சம் கோருவோர் தொடர்பில் தகுந்த கவனம் செலுத்தவும்

### பிரிட்டன் நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன், ஜூலை 8

வெளிநாடுகளிலிருந்தபடி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கூட இலங்கைக்கு அனுப்பப்பட்டால் துன்புறுத்தப்படலாம் என்பதால், தஞ்சக் கோரிக்கைகளின் போது இவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று பிரிட்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலங்கையர்களின் தஞ்சக் கோரிக்கைகளை பரிசீலிக்கும் போது, போரின் போது அவர்களின் செயற்பாடு மற்றும் புலம் பெயர்ந்த நாடுகளில் அரசியல் நடவடிக்கைகளில் அவர்கள் காட்டிய ஈடுபாடு போன்ற காரணிகளை கருத்தில் கொள்ளவேண்டும்.

தஞ்சக் கோரிக்கைக்காரர்களின் மனுக்களைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சமாக மனுதாரரின் நாடு குறித்த பரிந்துரையின் படி அதிகாரிகள் செயற்பட வேண்டும்.

அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பில், விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புடையவர்கள் மட்டுமல்லாது வெளிநாடுகளிலிருந்தபடி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கூட இலங்கைக்கு அனுப்பப்பட்டால் துன்புறுத்தப்படலாம் என்று குடியேற்றம் தொடர்பான உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சட்டத்தரணி அருண் கணநாதன் தெரிவித்தார்.

நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் பெரும்பாலான சமயங்களில் குறித்த வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது என்று பிரிட்டன் அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

இந்த வழக்கு விசாரணைகளின் போது, தஞ்சக்கோரிக்கையாளரின் குறித்த பரிந்துரையை வழங்க 9 நாள்கள் விசாரணை நடந்ததாகவும், இந்த வழக்கின் தீர்ப்பு மற்றவர்களுக்கும் பொருந்தும் என்று அருண்கணநாதன் தெரிவித்துள்ளார். (வ-5)

## சுன்னாகம் நகரிலிருந்து வெளியேறுவர் படையினர்

### முகாம் அமைந்துள்ள வீடுகள் உரிமையாளர்களிடம்

வலி.வடக்கு,ஜூலை 8

சுன்னாகம் நகர மத்தியில் அமைந்துள்ள இராணுவத்தினர் இம்மாத நடுப்பகுதியில் முகாமில் இருந்து வெளியேறவுள்ளதாக இராணுவத்தினர் தங்கியுள்ள வீடுகளின் உரிமையாளர்களிடம் நேற்று தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் நகர மத்தியில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள 14 வீடுகளில் தற்போது இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் 10 மணியளவில் சுன்னாகம் நகர மத்தி கிராம அலுவலர் அலுவலகத்தில் வீடுகளின் உரிமையாளர்களுக்கும் இராணுவ அதிகாரிக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றது.

> நேற்றைய சந்திப்பில் கலந்து கொள் ளாத வீடுகளின் உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு இதுதொடர்பில் பகுதி கிராம அலுவலரை நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

இதில் தற்போது சுன்னாகம் நகரப் பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள வீடுகளின் உரிமையாளர்களை நாளை செவ்வாய்க்கிழமை சுன்னாகம் நகர மத்தி கிராம அலுவலர் அலுவலகத்துக்குக் காணிகளின் உரிமையை உறுதிப் படுத்தும் ஆவணங்களுடன் வரும்படியும் தாம் இந்த மாத இறுதியில் வீடுகளை உரியவர்களிடம் கையளித்து விட்டு செல்லவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இத்துடன் நேற்றைய சந்திப்பில் கலந்துகொள்ளாத வீடுகளின் உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு இதுதொடர்பில் குறித்த பகுதி கிராம அலுவலரை நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே இந்தப் பகுதியில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள வீடுகளில் ஒரு தொகுதி பொது மக்களிடம் மீள வழங்கப்பட்ட நிலையில் தற்போது மிகுதியாக இராணுவத்தினர் தங்கியுள்ள வீடுகளையும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (வ-86)

## மருந்துகள் ஏற்றி வந்த வாகனம் விபத்து



யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு மருந்துகள் ஏற்றி வந்த வாகனம் மதகுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் கடந்த 5 ஆம் திகதி புளியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த நபர்கள் வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். (வ-9)

## சைக்கிள்களுக்கு 'ஸ்ரிக்கர்' யாழ்.பொலிஸார் முன்னெடுப்பு

வலி.வடக்கு,ஜூலை 8

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி களில் இரவில் நடைபெறக்கூடிய விபத்துக்களை தடுக்கும் வகையில் சைக்கிள்களின் பின்புறத்தில் பொருத்தப்பட வேண்டிய ஒளித் தெறிப்பு (டே லைற்) இல்லாத சைக்கிள்களுக்கு ஒளித் தெறிப்பு தாள்களை (ஸ்ரிக்கேர்ஸ்) ஒட்டும் நடவடிக்கையை யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸசார் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இரவு வேளைகளில் சைக்கிள்களில் பயணிப்போரின் சைக்கிள்களின் பின்புறத்தில் ஒளித் தெறிப்பு இல்லாத நிலமை காணப்படுகின்றது.

இதனால் பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு இத்தகைய ஒளித்தெறிப்பு தாளை யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றியின் ஆலோசனையின் பெயரில் ஒட்டுவதுடன் சைக்கிள்களின் உரிமையாளர்களுக்கு நிரந்தரமான ஒளித்தெறிப்பு கருவியை வாங்கி பொருத்தும்படியும் அறிவுறுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 5.45 மணியளவில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போக்குவரத்தப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சமிந்தா சில்வா தலைமையிலான பொலிஸ் குழுவினர்




இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட னர். நேற்றுமுன்தினம் பிற்பகல் தொடக்கம் இரவு 8 மணி வரை இடம்பெற்ற இந்த நடவடிக்கையில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சைக்கிள்களுக்கு ஒளித் தெறிப்பு தாள் ஒட்டப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பொலிஸசார் தெரிவித்தனர்.

சைக்கிள்களுக்கு ஒட்டுவதற்கான மஞ்சள் நிறத்திலான ஒளித் தெறிப்பு தாள்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வழங்கி உதவியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-86)

## வள்ளுவருக்கும் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 8



யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் உள்ள திருவள்ளுவர் சிலையை கே.கே. எஸ். வீதி தீவுப் பகுதிச் சந்திக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.சத்திரச் சந்தியில் வீதித் திருத்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதை அடுத்து வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட வேண்டியுள்ளதால் சந்தி யில் உள்ள திருவள்ளுவர் சிலையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதை அடுத்து திருவள்ளுவர் சிலையை யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்னால் முனீஸ்வரன் வீதிக்கு மாற்ற முடிவாகி இருந்தது. எனினும் சமய ஆர்வ லர்களின் கருத்துக்கு மதிப்பளித்து கே.கே.எஸ்.வீதி, தீவுப் பகுதிக்கான வீதிச் சந்திக்கு மாற்றுவது பொருத்தமானது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஓ-7-14)

## போதையில் வீர சாகஸம்; இருவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 8

மது போதையில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வீதியில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளை உதைத்துத் தள்ளியதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு எழுதுமட்டுவாழ் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்ததில் கிளாலியைச் சேர்ந்த நடராசா விநோதன் (வயது-36) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-9)

## இந்திய அரசின் புலமைப் பரிசில் இலங்கையர்கள் 290 பேருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 8

இந்திய அரசால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களில் இலங்கையைச் சேர்ந்த 290 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 24 பேரே வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று இந்தியத் துணைத் தூதரகத்தினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னணிப் பல்கலைக்கழங்கள் சிலவற்றில் கற்பதற்குத் தகுதியான இலங்கை மாணவர்கள் 290 பேருக்கு வருடாந்தம் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றது. இதில் இளமாணி, முதுமாணி மற்றும் ஆராய்ச்சிக்கான புலமைப் பரிசிலும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான புலமைப் பரிசிலும் வழங்கப்படுகின்றன.

நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் அல்லது கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப் பரிசில் 120 பேருக்கும், ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் 25 பேருக்கும், பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர சுற்றுவட்ட புலமைப் பரிசில் 2 பேருக்கும், கலாநிதிப் பட்ட ஆய்வுக்கான பொது நலவாய புலமைப்பரிசில் 5 பேருக்கும், கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான சார்க் புலமைப் பரிசில் 3 பேருக்கும், மௌலானா ஆஸாத் புலமைப் பரிசில் 50 பேருக்குமாக வழங்கப்படுகின்றது.

> இந்த வருடத்துக்கான புல மைப் பரிசில் வழங்கலில் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 24 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 24 பேரில் 13 பேர், 3 வருட கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்துக்கான புலமைப் பரிசில் வழங்கலில் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 24 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 24 பேரில் 13 பேர், 3 வருட கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொதுநாலவாய மற்றும் சார்க் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 7 கலாநிதிப் பட்ட ஆய்வு இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவை வடமாகாணத்துக்கே வழங்கப்பட்டுள்ளன. இலங்கை அரசின் உயர் கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் மேற்படி தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்துப் புலமைப் பரிசில்களும் மாதாந்த செலவினக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக பாடநெறியின் காலப் பகுதி முழுவதுக்குமான கல்விக் கட்டணத்தையும் உள்ளடக்குகின்றன.

தங்குமிடக் கொடுப்பனவு மற்றும் புத்தகங்கள், காகிதாதிகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவையும் வழங்குகின்றது. இவை தவிர இந்தியப் பேராயத்தின் புலமைப் பரிசில் பெற்றவர்கள் அனைவருக்கும் முழுமையான சுகாதார வசதி, இலங்கையிலிருந்து செல்லும்போது இந்தியாவின் மிகக் கிட்டிய விமான நிலையத்துக்கான விமானப் பயணக் கொடுப்பனவு, இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கான கல்விச் சுற்றுலாக் கொடுப்பனவுடன் மேலும் பல உதிரிக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# சூடு பிடிக்கிறது தேர்தல் களம் பேரப்பேச்சுக்களும் தாராளம்

## எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அரசு வலை

மாகாணசபைத் தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரே அரசியற்களத்தில் கட்சித்தாவல், பேரம் பேச்சுகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. இதன் ஓரங்கமாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியப் பிரமுகர்களை இலக்கு வைத்து அரச தரப்பு வலை விரித்துள்ளதுடன், பேரம் பேசும் ஆயுதங்களாகப் பதவிகள், பணம் ஆகியவற்றை அரசு பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜய சேகர, பாலித்த ரங்கே பண்டார மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் உள்ளிட்டோருக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளது என்று தகவல் கள் நம்பகரமாகத் தெரியவருகின்றன.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டாரவிடம் நேற்று கேட்ட போது, அரசிடம் இருந்து அவ்வாறான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத் திய அவர், அரசுடன் இணைவது குறித்து தீர்மானிக்கவில்லை என்றும் கூறினார்.

எனினும், தயாசிறி எம்.பியுடன் தொடர்பை ஏற்படுத்திய போதும் இரண்டு நாட்களாக அவர் கையடக்கத் தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார், சரத் பொன்சேகாவுடன் ஏற்பட்டுள்ள தனிப்பட்ட கருத்துமுரண்பாடு காரணமாக அவருடன் இணையமாட்டார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் மகாதேவா



வல்வெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சோமசுந்தரம் மகாதேவா (ஓய்வுபெற்ற கணக்காளர், விவசாய திணைக்களம் பேராதனை, கண்டி) அவர்கள் 05.07.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்வை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணம் கோயில்,
வல்வெட்டி
வல்வெட்டித்துறை.
தொடர்பு:077 447 0205,
021 320 5272

(37637)(3.6.11)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## பாலசுப்பிரமணியம் தாரணி



சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் தாரணி 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை , அப்பாச்சி, சுப்பையா, செல்லம் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் தயாளினி, தர்சினி (ஜேர்மனி), தர்மினி (ஜேர்மனி), முருகானந்தம் (சிறிலங்கா ரெலிகொம்), செல்வானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வரட்ணம், காலஞ்சென்றவர்களான இலங்கரட்ணம், தெய்வேந்திரம் மற்றும் அப்பன், இராசபூபதி, உமாதேவி, வள்ளியம்மை ஆகியோரின் பெறாமகளும் பரமேஸ்வரி, இந்திராணி, ஆச்சி, துரைசிங்கம், தவராசா ஆகியோரின் மருமகளும் இராஜேந்திரன் (சிறிலங்கா ரெலிகொம்), சிவலிங்கம் (ஜேர்மனி), சுனில் (ஜேர்மனி), பிரதீபா (கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் மைத்துனியும் சரணியா (யாழ்ப்பாணக் கல்லூரி-வட்டுக்கோட்டை), கார்த்திகா (யாழ்ப்பாணக் கல்லூரி), இலக்கியா (யாழ்ப்பாணக் கல்லூரி), தூபிகா (ஜேர்மனி), சியாம் (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தாயும் லுபீனி (ஜேர்மனி), சயன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

(30693)

தகவல்:
குடும்பத்தினர்.

## நாகமுத்து சரவணமுத்து



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சரவணமுத்து 06.07.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து- முத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிதம்பரம் மற்றும் லக்சுமி, உத்தமி, காலஞ்சென்ற பூர்வீகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரோஜாதேவியின் அன்புக்கணவரும் சாந்தினி (சுவிஸ்), தர்மகுமார் (இத்தாலி), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), செந்தில்குமார் (கபிஸ்னா கபே- அச்சுவேலி), திருக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரவணபவன் (சுவிஸ்), லதாகினி (இந்தியா), அனுராதா (அச்சுவேலி), அனிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

(சி/10278)

தகவல்:
குடும்பத்தினர்.
0773618014

## 50 மாணவருக்கு இன்று நிதியுதவி

தென்மராட்சி கிழக்குப் பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு இன்று திங்கட்கிழமை கல்வி உதவி நிதி வழங்கப்படவுள்ளது.

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு.சர்வானந்தா மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-9)

## நவாலி கதிர்காம கொடியேற்றம் இன்று

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய ஆடிவேல் உற்சவம் இன்று 8ஆம் திகதி காலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மா.பத்மநாதன் தலைமையில் ஆலய பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

இந்த ஆடிவேல் உற்சவ விழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறும். இதே வேளை இன்று முதல் தினமும் மாலை 6 மணிக்கு விசேட சொற்பொழிவு இடம்பெறும் என ஆலயத் தலைவர் அறிவித்துள்ளார். (ங-50)

# மரண அறிவித்தல்

## திருமதி. யோகமலர் இராசரட்ணம்



கொக்குவில் கிழக்கு, பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகமலர் இராசரட்ணம் நேற்று (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இராசரெட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமலிங்கம் - திரவியம் தம்பதியரின் புதல்வியும் புஸ்பராணி (கொக்குவில்), திருலோகசுந்தரம் (கொழும்பு), தர்மராசா (களஞ்சிய பொறுப்பாளர், நல்லூர் பல.நோ.கூ.சங்கம்), சகுந்தலாதேவி (உரும்பிராய்), நவகுமார் (அமெரிக்கா), கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, விமலாதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2013) பி.ப. 1.30மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுக்கோவிலடி, பாடசாலை வீதி,
கொக்குவில் கிழக்கு.

(30695)

தகவல்:
தர்மராஜா. (சகோதரன்)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா சண்முகநாதன்



யாழ்ப்பாணம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், மன்னார் இலுப்பைக்கடவையில் வசித்து வந்தவரும் தற்போது கொண்வென்ற் வீதி, மன்னாரில் வசித்து வந்தவருமாகிய திருவாளர் நடராசா சண்முகநாதன் நேற்றுமுன்தினம் (06.07.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொண்வென்ற் வீதி, மன்னார்.

தகவல்:
சகோதரர்கள்.

## கந்தையா மாகலிங்கம்



சாவகச்சேரி சப்பச்சிமாவடியைப் பிறப்படமாகவும், அளவெட்டி, மல்லாவி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது கனடா மார்க் கத்தை (Markham) வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் நேற்றுமுன்தினம் (06.07.2013) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், மைதிலி(கனடா), மகாரூபன் (கனடா), காலஞ்சென்ற மயூரன், சிவரூபன் (கனடா), மதனிகா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருநாவுக்கரசு (சாவகச்சேரி), காலஞ்சென்ற யோகம்மா, அன்னலட்சுமி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோத ரரும், கனகராஜா (கனடா), பிரதீபா (கனடா), சுதர்ஷன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், நீலாம்பகை (சாவகச்சேரி), கந்தையா(கனடா), காலஞ்சென்ற கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திஷானி, தஷ்ணவன், வைஷ்ணவன், சஹினா, அதீதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சப்பச்சி மாவடி, சாவகச்சேரி.

தகவல்: கந்தையா திருநாவுக்கரசு.

## திருமதி.பார்வதிப்பிள்ளை நடராஜா

(ஓய்வுநிலை ஆசிரியர்)



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பார்வதிப்பிள்ளை நடராஜா 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சேதுப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான தம்பையா - மீனாட்சிப்- பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராஜா (ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர்)வின் அன்பு மனைவியும் குமாரதாஸ் (ஸ்ரீலங்கா ரெலிகொம்- கொழும்பு), சூரியகுமாரி (பிரதேச செயலம், தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு தாயும் றாதை (முன்னாள் நிகழ்ச்சிதயாரிப்பாளர், ரூபவாஹினி கூட்டுத்தாபனம்), யோகநாதன் (இலங்கை மின்சாரசபை- சாவகச்சேரி) ஆகியோரின் மாமியும் பிரபு, இந்துஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, மங்கையற்கரசி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, சபாரட்ணம், பராசக்தி, இரத்தினசபாபதி மற்றும் சர்வலட்சமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணியவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.
021 227 0145

(30697)

தகவல்:
குடும்பத்தினர்.

## சந்தியா தேவதாசன்



ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியா தேவதாசன் நேற்று (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற விமலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தமிழ்ச்செல்வி மற்றும் தமிழ்ச்செல்வன் காலஞ்சென்ற தமிழரசி மற்றும் கலையரசி ஆகியோரின் தந்தையும் சிவகுமார், பவானி, ஜெக்குமார் (கண்ணா), பிரதீபன் ஆகியோரின் மாமனும் அனிச்சன், கோபி, லக்சிகா, யனுசன், அபி, தனுஸ், தனுசா, பவித்திரா, சுபிக்கா, தேனுயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வு இன்று (08.07.2013) திங்கட்கிழமை சென்.நீக்கிலஸ் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சென்.நீக்கிலஸ் சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

68/18, அராலி வீதி, ஒட்டுமடம்.

(30696)

தகவல்: குடும்பத்தினர்.

# வல்வை தீருவிலில் பொதுப்பூங்கா 62 பரப்பில் மீண்டும் உயிர்ப் பெறுகிறது




வல்வெட்டித்துறை தீருவில் வயலூர் முருகன் கோயிலுடன் அமைந்துள்ள வயல்பகுதியில் 62 பரப்பு நிலத்தில் சகல வசதிகளையும் கொண்ட பொதுப்பூங்கா அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் கடந்த வருடம் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய பொதுப் பூங்கா அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு பலரது உதவிகளைப் பெற்று இந்தப் பூங்கா அமைக்கும்பணிஆரம்பிக்கப்பட்டன. அப்போதைய வல்வெட்டித்துறை நகரசபை செயலாளரின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை நகர சபைஇப்பூங்காஅமைக்கும்பணியை மேற்கொண்டது. அப்பூங்காவில் பல்வேறு பூ மரச்செடிகளும், சவுக்கு காட்டின் சுவாலை என அழைக்கப்படும் (Flame of the Forest) மரங்களும் பல்வேறு வர்ணக்குரோட்டன்கள்,செவ்வரத்தை, ரோஜா போன்ற கவர்ச்சியான மரங்களும் மற்றும் மா, கொய்யா, பலா, மாதுளை, அருநெல்லி, விளா, பருத்தி, சப்படில்லா, மலைவேம்பு, செவ்விளநீர், தென்னைகள் போன்ற பயன்தரும் மரங்களும் நடப்பட்டன. பூங்கா மிகச் சிறந்த ஒரு சுற்றுலாத் தலமாக வளர்ச்சியடைந்து வந்ததுடன், யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பொது மக்கள் தமது ஓய்வு நேரத்தை கழிப்பதற்காகவும், தாவரவியல் கற்கும் மாணவர்கள் பல்வேறு தாவரங்கள் தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொள்வதற்காகவும் வருகை தந்திருந்தனர்.

ஆனால் தொடர்ந்து நடைபெற்ற போர் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக பொதுப்பூங்கா கவனிப்பாரற்றுப்போக, அப்போதைய நகராட்சி மன்றமும் அதனை நிருவகிக்க முடியாமல் போனதால் படிப்படியாக அவை மீண்டும் வெற்று நிலங்களாக்கப்பட்டன.

மீண்டும் போர் முடிவுக்கு வந்து மக்களினது இயல்பு வாழ்க்கை சுமுக நிலைக்கு வரத் தொடங்கியதும், புதிதாகப் பொறுப்பேற்ற தற்போதைய நகராட்சி மன்றம் இப்பூங்காவைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதற்கான வேலைகளை ஆரம்பித்துள்ளது.


பூங்கா அமைப்பதற்கான நிலப் பரப்பில் 62 பரப்பை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டுள்ளது. வல்வெட்டித்துறை மக்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு தூய வளியைத் தரக்கூடிய நிலப் பரப்பை பசுமை நிறைந்த பூங்காவாக அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதனை யாழ்ப்பாணத்தில் மிகச் சிறந்த ஒரு பூங்காவாக அமைப்பதன் மூலம் வடபகுதி மக்கள் மட்டுமல்லாது தென்னிலங்கையில் இருந்தும் மக்களும் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எமது மக்களின் பொழுதுபோக்கு மற்றும் சுகாதார நலன்கருதி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும், பொதுமக்களும் தமது உதவிகளை வழங்குமாறு வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-8)




## புனரமைப்பு தடைப்பட்டு பாதுகாப்பின்றி கால்வாய்



யாழ்ப்பாணம், ஜூலை 8

முற்றவெளியில் உள்ள யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு முன்பாக வெட்டப்பட்ட வடிகால்வாய் துரித புனரமைப்பின்றி பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகிறது.

எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு எரிபொருள்களை நிரப்ப வரும் வாகனங்கள் மற்றும் நுகர்வோர் இந்தப் பாதுகாப்பற்ற அரைகுறையாக நிர்மாணிக்கப்பட்ட வடிகால்வாயினால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகவே இந்த வடிகால்வாயை துரிதமாக புனரமைப்பதற்காக சம்பந்தப்பட்டோர் உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (வ-17)



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிகழ்வு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு வருகை தந்த பிரமுகர்கள்.

## விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 8

ஏ-9 வீதியில் சென்ற ஓட்டோ எதிர்த் திசையில் உள்ள ஒழுங்கைக்குச் சென்றபோது அதே திசையில் வந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோவுடன் மோதியதில் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மிருசுவில் வடக்கைச் சேர்ந்த சக்திவேல் சசிகரன் (வயது-23), ஓட்டோ சாரதியான கொடிகாமம் வெள்ளம்போக்கட்டியைச் சேர்ந்த சின்னப்பு ஞானப்பிரகாசம் (வயது-53) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

அவர்கள் இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த ச.சசிகரன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

## பொலிஸாரிடம் வசமாக சிக்கின திருட்டு மணலுடன் டிராக்டர்கள்

வலி.வடக்கு, ஜூலை 8

அரியாலைப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த டிராக்டர்கள் 3 இரவு நேரம் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டன.

அரியாலை கிழக்குப் பகுதியில் உள்ள மணற்பிட்டிகள் மற்றும் தனியார் காணிகளில் இருந்து கடந்த பல மாதங்களாக தொடர்ந்து மணல் திருட்டு இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பாக தடுக்கச் செல்லும் பொதுமக்கள் தாக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவது போன்ற சம்பவங்களும் கூட கடந்த காலத்தில் இடம்பெற்றமையால் இந்த நடவடிக்கையை பொதுமக்கள் கண்டும் காணாமல் இருந்துள்ளனர்.

இதேவேளை குறித்த பிரதேசத்தில் இருந்து மணல் கடத்தப்படுவது தொடர்பாகப் பொலிஸாரிடம் முறையிட்ட இந்தப் பகுதி கிராம அலுவலர் ஓட்டோவில் வந்த இளைஞர் குழு தாக்கப்பட்டு படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்ததுடன் இடமாற்றத்தைப் பெற்று மாறியும் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸார் மூன்று உழவு இயந்திரங்கள் மணல் ஏற்றிக் கொண்டு வந்த நிலையில் உழவு இயந்திரங்களையும் மணலையும் பொலிஸ் நிலையம் கொண்டு வந்தனர். அதனுடன் தொடர்புடையவர்களைப் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்தனர். (வ-86)

## நல்லூர் திருவிழா காலத்தில் ஆலயச்சூழலில் விசேட பாதுகாப்பு

### யாழ்.பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 8

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாக் காலத்தில் இடம்பெறக்கூடிய குற்றச் செயல்களைத் தடுக்க ஆலயச் சூழலில் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்க யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வருடமும் ஆலய சூழலில் பாதுகாப்புக் கடமைகளுக்காக சிவில் உடைகளுடன் அதிகளவானோர் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இதனால் பெரியளவிலான களவுச் சம்பவங்கள் ஏனைய குற்றச் செயல்கள் இடம்பெறாமல் தடுக்கப்பட்டிருந்தன.

அதேபோன்று இந்த வருடமும் அதிகளவான பக்தர்கள் வெளிமாவட்டங்களில் இருந்தும் தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்தும் திருவிழாக்காலத்தில் வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுவதால் இதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விசேடமாக பக்தர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டி இருப்பதால் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டியுள்ளது.

ஆலய சூழலில் திருவிழாக்காலத்தில் விசேடமாக பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவு மேற்கொண்டு வருகிறது. (வ-14)

### குருத்தடைப்பு நோயால்

## வாழைச் செய்கையாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்.குடாநாட்டில் உள்ள வாழை மரங்களில் ஏற்பட்ட குருத்து அடைப்பால் வாழைச் செய்கையாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

தற்போதைய பருவபெயர்ச்சிக் காற்றின் கடும் தாக்கம் தான் வாழைகளில் குருத்தடைப்பு நோய் ஏற்படக் காரணம் என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது குருத்தடைப்புக்கு இலக்கான வாழைகளை வெட்டி மாற்று வாழைகளை நடுகை செய்யும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குருத்தடைப்பு நோய் மற்றும் கடும் காற்றாலும் இம்முறை வாழைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தோடுவாழைப்பழத்தின்விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக முன்னர் கிலோ 30 ரூபாவாக விற்கப்பட்ட கதலிப்பழம் தற்போது 50 ரூபாவாக அதிகரித்துள்ளது.


அத்துடன் குடாநாட்டின் போதிய வாழைக் குலைகள் இல்லாமையால் தென்பகுதிக்கான வாழைக்குலை ஏற்றுமதியும் திடீரென பாதிக்கப்பட்டுள்ளது. (வ-17)

# புத்தகயாவில் தொடர் குண்டு வெடிப்புகள்

## 5 பேர் படுகாயம்; விசாரணைகள் தீவிரம்

புத்தகயா, ஜூலை 8

இந்தியாவின் பீகார் மாநிலம், புத்தகயாவில் அமைந்துள்ள பௌத்தர்களின் புனிதலமான மகாபோதியின் அருகே நேற்று அதிகாலை தொடர் குண்டுவெடிப்புகள் நடத்தப்பட்டுள்ளன. அதில் 5 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.



அதிகாலை 5.15 மணியளவில் மகாபோதியின் வளாகத்தில் உள்ள தாரா கோயில், குளம் மற்றும் தியான பகுதி ஆகிய மூன்று இடங்களில் குண்டுகள் வெடித்துள்ளன. அதன் பின்னர் தொடர்ச்சியாக கோயில் வளாகத்துக்கு வெளியே ஐந்து குண்டுகள் வெடித்துள்ளன.

சுமார் அரைமணி நேரத்துக்குள் இடம்பெற்ற இந்த 9 குண்டு வெடிப்புகளால் ஐந்து பேர் படுகாயம் அடைந்துள்ளனர். கோயில் வளாகத்தில் தியானத்தில் ஈடுபட்டிருந்த திபெத் மற்றும் மியான்மர் நாடுகளைச் சேர்ந்த இரு புத்த பிக்குகள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. தேடுதலின்போது மேலும் இரு குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழகச் செய்யப்பட்டன என்று பீகார் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதில் ஒரு வெடிகுண்டு 80 அடி உயரமுள்ள புத்தர் சிலையின் பின்புறம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது.

இந்தத் குண்டு வெடிப்புகள் தீவிரவாதத் தாக்குதல்கள் தான் என்பதை உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்துள்ள இந்திய மத்திய உள்துறை அமைச்சகம், குண்டு வைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் வெடிகுண்டுகளின் வகை என்பவற்றைக் கொண்டு அதை உறுதிப்படுத்த முடிகின்றது என்றும் தெரிவித்துள்ளது.

அதேவேளை, புத்தகயாவில் தாக்குதல் நடத்துவதற்கு தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று இந்திய உளவுத்துறை முன்னதாகவே பீகார் அரசுக்குத் தகவலளித்திருந்தது என்று தற்போது தெரிய வருகின்றது. (ற)



பீகாரின் தலைநகர் பாட்னாவில் இருந்து 96 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் நகரம் புத்த கயா. இங்கு இருக்கும் போதி மரத்தடியில்தான் புத்தருக்கு ஞானம் பிறந்தது என்றும் அதன் பின்னரே அவரால் புத்த மதம் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. பௌத்தர்களுக்கு இந்த புத்த கயாவிலுள்ள மகா போதி கோயில் மிகவும் புனித தலமாகக் கருதப்படுவதுடன், உலகம் முழுவதிலும் இருந்து ஏராளமான புத்த மதத்தவர்கள் அங்கு வந்து செல்கின்றனர்.

## மன்மோகன் கண்டனம்

புதுடில்லி, ஜூலை 8

புத்தகயாவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

''வணக்கத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தாக்குல் இடம்பெற்ற பகுதிகளை பீகார் முதலமைச்சர் நேரில் பார்வையிட்டுள்ளார். (ற)



## உள்நாட்டு தொழில்நுட்பத்தில் பிரமாண்டமான போர்க்கப்பல் ▲

புதுடெல்லி, ஜூலை 8

முதன்முறையாக இந்தியாவின் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் பிரமாண்டமான விமானம்தாங்கி போர்கப்பல் தயாரிக்கப்பட்டு வருகின்றது

இந்திய விமானப்படையினரின் தேவைக்காக விமானம் தாங்கிப் போர்க்கப்பல்கள் கொள்வனவு செய்யப்பட்டுக் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. தற்போது இந்திய விமானப் படைக்காக முதல் முறையாக உள்நாட்டு தொழில்நுட்பத்திலேயே மிக பிரமாண்டமான போர்க்கப்பல் கொச்சி துறைமுகத்தில் தயாரிக்கப்பட்டு வருகிறது. 2018ஆம் ஆண்டுக்குள் அதன் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, இராணுவத்தின் பயன்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## புத்தகயாவில் தாக்குதல்

## தமிழகத்தில் பாதுகாப்பு பலம்

சென்னை, ஜூலை 9

பீகாரில் உள்ள புத்தகயா மகாபோதி கோயிலில் நேற்று அதிகாலை தொடர் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றன. இதில் கோயிலுக்கு சேதம் ஏதும் ஏற்படாத போதும் 5 பேர் காயமடைந்தனர்.

அதையடுத்து, தமிழகத்திலுள்ள பல்வேறு இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை, எழும்பூரில் உள்ள மகா போதி மடம், இலங்கை துணை தூதரகம், இலங்கை வங்கிகள், இலங்கை செல்லும் விமானங்கள் மற்றும் பல்வேறு கோயில்கள், ரயில் நிலையம் போன்ற இடங்களில் இரண்டு அடுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

## சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றப் போராட்டம்

### கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஜூலை 8

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றும் வரை தி.மு.க. தொடர்ந்து போராடும் என்று அந்தக் கட்சியின் தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார். கருணாநிதியின் 90ஆவது பிறந்தநாளை முன்னிட்டு திருவாரூரில் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே கருணாநிதி இவ்வாறு அறிவித்துள்ளார்.

''அண்ணா போன்ற மூத்த தலைவர்களின் கனவுத் திட்டமாக சேது சமுத்திரத் திட்டம் விளங்கியது. அப்படிப்பட்ட இந்த மகத்தான திட்டத்தை, நிறைவேற்றியே தீருவோம் என அ.தி.மு.க. பொது செயலாளர் ஜெயலலிதா, தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருக்கின்றார். எனினும் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அவரே சேது சமுத்திரத் திட்டத்தை அடக்க முயற்சிக்கின்றார்'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ற)

## அயோத்தி பிரச்சினையை கையிலெடுக்கும் பா.ஜ.க.

புதுடில்லி, ஜூலை 8

அயோத்தியில் இராமர் கோயிலைக் கட்டுவதில் பா.ஜ.க. உறுதியாக இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க.வின் உத்தரப் பிரதேச தேர்தல் குழு பொறுப்பாளரும் மோடியின் நெருங்கிய உறவினருமான அமீத்ஷா.

நேற்று அயோத்திக்குச் சென்ற அவர் அங்கு ஊடகவியலாளர்களைச் சந்திக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இவரின் இந்தக் கருத்துக்குப் பல்வேறு தரப்பினரிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், "இப்போது மட்டுமல்ல எப்போதும் அயோத்திப் பிரச்சினையை கிளப்புவதையே பா.ஜ.க. வாடிக் கையாகக் கொண்டுள்ளது. மக்களை முட்டாளாக்கவே பா.ஜ.க முயற்சிக்கிறது" என்றுகூறியுள்ளார்.(ற)

## கருணாநிதி குடும்ப நலன்களுக்காக தமிழின உணர்வை தொலைத்தவர்

### நாஞ்சில் சம்பத் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 8

தனது மகள் கனிமொழி மாநிலங்களவை தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என குடும்ப பாசம் காரணமாக தமிழ் மொழி, இன உணர்வை குழி தோண்டிப் புதைத்து விட்டு காங்கிரஸுடன் நட்பு கொண்டுள்ளார் கருணாநிதி என்று சாடியுள்ளார் அ.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத்.

மன்னார்குடியில் நடைபெற்ற அ.தி.மு.கவின் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவத்துள்ளார்.



''ஈழத்தில் அப்பாவித் தமிழர்கள் பல லட்சம் பேர் கொன்று குவிக்கப்பட்ட போது கண்டுகொள்ளாமல் மத்தியிலும், மாநிலத்திலும் பதவி சுகத்தில் திளைத்த கருணாநிதி. மக்களால் தோற்கடிக்கப்பட்ட பின் ஈழ தமிழர்காக மத்திய அமைச்சரவை, காங்கிரஸ் கூட்டணியிலிருந்து விலகுவதாக அறிவித்தவர்.

இன்று மக்களவை தேர்தலில் தனது மகள் வெற்றி பெற வேண்டும் எனக் கூறி மொழி, இன உணர்வை குழித் தோண்டி புதைத்து விட்டு காங்கிரஸ் வாக்குகளை பெற்று கனிமொழிக்கு முடிசூட்டியுள்ளார்'' என்று அங்கும் மேலும் தெரிவித்தார் அவர். (ற)

## கணவர் மீது யுக்தா முகி முறைப்பாடு

புதுடில்லி, ஜூலை 8

முன்னாள் உலக அழகியும், பிரபல நடிகையுமான யுக்தா முகி கணவர் தன்னைத் துன்புறுத்துகின்றார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

யுக்தா முகி 1999ஆம் ஆண்டு உலக அழகியாகத் தேர்வு செய்யப்பட்டவர். இவர் பிரின்ஸ் துளி என்பவரை 2008ஆம் ஆண்டு திருமணம் செய்தார். 35வயதாகும் முகிக்கு தற்போது ஒரு ஆண் குழந்தை உள்ளது.

இந்தநிலையிலேயே கணவர் தன்னை துன்புறுத்துகின்றார் என்று முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் தற்போது விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ற)



## அமெரிக்காவில் விமானம் விபத்து: 2 பேர் சாவு; 180 பேர் காயம்

சான்பிரான்சிஸ்கோ, ஜூலை 8

போய்ங் 777 ரக பயணிகள் விமானம் அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ சர்வதேச விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் இருவர் உயிரிழந்ததுடன் 180க்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளர்.

இந்த விமானத்தில் 291 பயணிகளும் 16 விமானப் பணியாளர்களும் பயணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. 141 சீனப் பிரஜைகளும், 77 தென்கொரியர்களும், 61 அமெரிக்கப் பயணிகளும் அடங்கி இருந்தனர்.

குறித்த விமானம் தென்கொரியத் தலைநகர் சியோலில் இருந்து பறப்பை மேற்கொண்டிருந்தது. விமானம் தரையிறங்குவதற்காகத் தாழ்வாகப் பறந்தபோது விமான நிலையத்தில் உள்ள கடற்சுவருடன் மோதியுள்ளது என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ள 10 பேர் சான்பிரான்சிஸ்கோவில் உள்ள மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் இருவர் சிறுவர்கள் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற)

## அமெரிக்காவில் நடந்த விநோத போட்டி

நியூயோர்க், ஜூலை 8

அமெரிக்காவில் துர்நாற்றத்தை நுகரும் போட்டி என்று வித்தியாசமான போட்டி ஒன்றை நடத்தி பரிசுகளையும் வழங்கி வருகிறார்கள்.

'ரொட்டன் ஸ்மெல்லிங் ஸ்னீக்கர்' என்ற இந்த துர்நாற்றத்தைச் சகிக்கும் போட்டி அமெரிக்காவில் கடந்த 38 வருடங்களாக நடந்து வருகிறது.

முதலில் ஒரு காலணி நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட




இந்தப் போட்டி, பின்னர் வாசனைத் திரவியம் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றினால் தேசிய போட்டியாக விரிவாக்கம் செய்யப்பட்டது.

இந்தப் போட்டியில் முதல் பரிசை வெல்பவர்களுக்கு அமெரிக்க மதிப்பில் 2500 டொலர் பரிசாக அளிக்கப்படும்.

இந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் கேசி ஆடம் என்ற இளம் பெண் வெற்றி பெற்றுள்ளார். இவர் தனது நாயுடன் கோழிக் கூண்டில் அடைக்கப்பட்டார். அதை சகித்துக் கொண்டு சில மணி நேரங்கள் தாக்குப் பிடித்ததால் அவருக்கு முதல் பரிசு கிடைத்தது. (ற)

## எனக்கு 92; அவளுக்கு 22

பாக்தாத், ஜூலை 8

ஈராக்கில் 92 வயது தாத்தா தன்னைவிட 70வயது குறைந்த 22வயது பெண்ணை மணந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். முசலி முகமது அல் முஜமை (92) என்ற இவருக்கு 16 பிள்ளைகள் உள்ளனர். இவருடைய மனைவி 3 ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார். அதையடுத்து அவர், இரண்டாவது திருமணம் செய்து கொள்ள எண்ணினார். அவரை மணம்முடிக்க அதே பகுதியைச் சேர்ந்த முனா முக்லிப் அல் ஜுப்புரி என்ற 22 வயதுப் பெண் முன்வந்தார். இருவருக்கும் திருமணமும் முடிந்துள்ளது. அது மட்டுமல்ல கூடவே முஜமையின் இரண்டு பேரன்களின் திருமணமும் நடைபெற்றதாம். இது எப்படி? (ற)

# முடிவுக்கு வராத வன்முறைகள்

## எகிப்தில் 30 பேர் சாவு; 1000க்கும் மேற்பட்டோர் காயம்

கெய்ரோ, ஜூலை 8

எகிப்தின் ஜனாதிபதி பதவியில் இருந்து மொஹமட் மூர்சி விலக்கப்பட்டு அந்நாட்டு இராணுவத்தால் இடைக்கால அரசு உருவாக்கப்பட்டுள்ள போதும் அங்கு தொடர்ந்தும் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.



முர்சியின் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே கடும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அதில் இதுவரை 30க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன், ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

முர்சி தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை நோக்கி அவரது ஆதரவாளர்கள் பேரணி நடத்த முயன்றபோதே இந்த வன்முறைகள் ஆரம்பமாகின. ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் பெற்றோல் குண்டுகள் கொண்டு தாக்குதல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

"முர்சி விடுவிக்கப்பட்டு அவர் மீண்டும் பதவியில் அமரும் வரை எமது போராட்டம் தொடரும்" என்று முர்சியின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

"பேரணி நடத்துவதற்காக வழங்கப்பட்ட அனுமதியை வரம்பு மீறிப் பயன்படுத்துவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். முடிவில்லாத பழிவாங்கல் நடவடிக்கைகள் மூலம் எந்த வித மாற்றங்களும் நிகழ்ந்து விடப் போவதில்லை" என்று எகிப்திய இராணுவம் வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை குறித்து அந்நாட்டின் இடைக்கால ஜனாதிபதி அட்லி மன்சூர் உயர்மட்ட ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளார். (ற)

## அபு கட்டாடா ஜோர்தானுக்கு அனுப்பப்பட்டார்



லண்டன், ஜூலை 8

பயங்கரவாத குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள கடும்போக்குவாத மதகுருவான அபு கட்டாடா பிரிட்டனில் இருந்து ஜோர்தானுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

அபு கட்டாடாவை ஏற்றிய விமானம் நேற்று ஜோர்தானுக்குச் சென்றுள்ளது என்று தெரியவருகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பிரிட்டன் உள் விவகார செயலாளர் திசேராமே, "அபு கட்டாடாவை நாடு கடத்தும் தீர்மானத்தை பிரிட்டிஸ் மக்கள் வரவேற்பார்கள்" என்று தெரிவித்துள்ளதுடன், அந்த ஆபத்தான மனிதர் தற்போது நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டு, அவரின் சொந்த நாட்டில் வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளவுள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


அபு கட்டாடாவை நாடு கடத்துவது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கென 2.5 மில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையைப் பிரிட்டன் செலவிட்டுள்ளது.

அபு கட்டாடா துன்புறுத்தப்படமாட்டார் என்பதற்கு ஆதாரமாக பிரிட்டன் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளுக்கு இடையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டே அவர் நாடு கடத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## எரிபொருளுடன் சென்ற ரயில் சிதறியது

ஒட்டாவா, ஜூலை 8

கனடாவில் பெற்றோலியப் பொருள்களை ஏற்றிச் சென்ற ரயில் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து வெடித்துச் சிதறியுள்ளது. கியூபெக் மாகாணத்தில் உள்ள லக்மெகன்டிக் நகர் அருகே பயணித்துக் கொண்டிருந்த போதே ரயில் திடீரெனத் தீப்பிடித்து வெடித்துச் சிதறியுள்ளது. அதையடுத்து ரயிலின் ஏனைய பெட்டிகள் தடம்புரண்டன.



ரயில் முழுவதும் பெற்றோலியப் பொருள்கள் ஏற்றப்பட்டிருந்தமையால் தீ பெரும் சுவாலையுடன் கொழுந்துவிட்டு எரிந்தது. அதையடுத்து அமெரிக்காவில் இருந்து அழைக்கப்பட்ட தீயணைப்பு வீரர்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

தீயால் எழும் கரும்புகை காரணமாக அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

விபத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்தோ சேதங்கள் குறித்தோ தற்போது மதிப்பிட முடியவில்லை என்று மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ற)

## சோதனை தோல்வி

### அதிர்ச்சியில் அமெரிக்கா


வோஷிங்டன், ஜூலை 8

ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் அமெரிக்காவின் ஏவுகணைச் சோதனை தோல்வியில் முடிவடைந்துள்ளது. அதையடுத்து அது குறித்து உயர்மட்ட விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது அமெரிக்கா.

எதிரி ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் அதிநவீன ஏவுகணைச் சோதனை அமெரிக்க இராணுவத்தால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. பசிபிக் பெருங்கடல் பகுதியில் நடத்தப்பட்ட இந்த சோதனை தோல்வி அடைந்துள்ளது. "தொழில்நுட்பகோளாறு காரணமாக சோதனை தோல்வி அடைந்துள்ளது" என்று அமெரிக்க இராணுவ தலைமையகமான பெண்டகன் தகவல் வெளியிட்டுள்ளது.

தரையில் இருந்து நீண்ட தூரம் சென்று எதிரி ஏவுகணையை அழிக்கும் அதிநவீன ஏவுகணை சோதனை தொடர்ந்து தோல்வி அடைவது குறித்து தீவிர விசாரணை நடத்தப்படும் என்று அமெரிக்க ஏவுகணை பாதுகாப்பு நிறுவன செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் லெனர் தெரிவித்துள்ளார்.

குறித்த சோதனை 2008 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட போதும் தோல்வியிலேயே முடிந்தன. (ற)



# யாழ். கோண்டாவில் குமரகோட்டம்

# திருவருள்மிகு ஞானவைரவர் ஆலய

## புனராவர்த்தனப் பிரதிஷ்டா பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

## விஜய வருடம் ஆனி மாதம் 26 ஆம் நாள் (10.07.2013)

## புதன்கிழமை காலை 9.05 - 10.05

**வைரவப்பெருமான் அடியார்களே!**

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விஜய வருடம் ஆனி மாதம் 26 ஆம் நாள் (10.07.2013) புதன்கிழமை காலை பூச நட்சத்திரமும், துதியை திதியும், சித்தயோகமும் கூடிய காலை 9.05 மணி முதல் 10.05 மணி வரையுள்ள சிங்க லக்ன சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஞானவைரவப் பெருமானுக்கும், விநாயகர், சுப்பிரமணியர், நூதனமீனாட்சி, சுந்தரேஸ்வரர், தட்ஷணாமூர்த்தி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளதால் அடியார்கள் அன்றும் அதற்கு முதல் நான்கு நாள்கள் நடைபெறும் பூர்வாங்கக் கிரியைகளையும் தரிசித்து வைரவப் பெருமான் திருவருள் பெற்று வையகத்துள் சிறப்புற வாழ்வீர்களாக.

## கிரியா கால விவரம்

விஜய வருடம் ஆனி மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பின்னிரவு சூரியோதயத்துக்கு முதல் 5.30 மணிக்கு சந்திரஹோரையில் கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி மூன்று நாள்கள் நடைபெற்று 4ஆம் நாள்

**ஆனி மாதம் 25ஆம் நாள் (09.07.2013) செவ்வாய்க்கிழமை அதிகாலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்,** யாகபூசை, திரவியஹோமம். **மாலை 5 மணி** பிம்பசுத்தி, பிம்பரட்க்ஷாபந்தனம், நியாசங்கள், ஸ்பர்சாகுதி, யாகதீபாராதனை, சிவாசார்ய உபசாரம் என்பன நடைபெறும்.

**ஆனி மாதம் 26ஆம் நாள் (10.07.2013) புதன்கிழமை காலை 7 மணி** மஹாபூர்ணாகுதி, யாகதீபாராதனை, வேத ஸ்தோத்திர பாராயணம், அந்தர்பலி, பகிர்பலி, பிரதான கும்பங்கள் வீதிபிரதட்சணம், காலை 9.05 மணியளவில் தூபி அபிஷேகம், **10 மணிக்குள்** மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து தர்சனம், சம்பாவனை, ஆசீர்வாதம், ஆசியுரை, மஹாபிஷேகம், தீபாராதனை, பிரசாதம் வழங்கல், மகேஸ்வர பூசை (அன்னதானம்) என்பன நடைபெறும். **மாலை 6 மணிக்கு** விஷேட பூஜை, திருவூஞ்சல் நடைபெற்று வைரவப் பெருமான் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பாராக.

## குருமார் விவரம்

**சர்வபோதகாசிரியர்கள்**
"சிவாகம ஞானபாஸ்கரன்"
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ தா.அரிகரசுப்பிரமணியக் குருக்கள் (இணுவில்)

**ஏனைய குருமார்கள்**
சிவஸ்ரீ ச. ஸ்ரீசந்தனக் குருக்கள் (கொக்குவில்)
சிவஸ்ரீ கு. சிவதாசக் குருக்கள் (கொக்குவில்)
சிவஸ்ரீ சா. சோமசபேசக்குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ கு. சரவணபவக் குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ ம. வத்சாங்கக் குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ சி. திலீபன் குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ ப. சிவசங்கரக் குருக்கள் (தாவடி)
சிவஸ்ரீ இரத்தினேஸ்வரக் குருக்கள் (தாவடி)

**மங்கள வாத்தியம் சிவதாஸ்குழுவினர்**
(இணுவில்)

**பிரதிஷ்டா குரு**
"சிவாகம கிரியா தத்துவநிதி" "கிரியாபூஷணம்"
சிவஸ்ரீ முத்து. ஜெயந்திநாதக் குருக்கள்
(வவுனியா)

**ஆசியுரை**
சிவஸ்ரீ தா. அரிஹரசுப்பிரமணியக் குருக்கள்
(இணுவில்)
சிவஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா
(கொக்குவில்)

**யாகசம்ரட்க்ஷகர்கள்**
பிரம்மஸ்ரீ வாசுதேவ சர்மா (வவுனியா)
பிரம்மஸ்ரீ ச.மார்க்கண்டேய சர்மா (கொக்குவில்)
பிரம்மஸ்ரீ மா. பார்த்தீப சர்மா (கொக்குவில்)
பிரம்மஸ்ரீ இ. தினேஷ் சர்மா (மட்டுவில்)
பிரம்மஸ்ரீ சி. சந்தானகுமார சர்மா (உடுவில்)
பிரம்மஸ்ரீ நா. ரவி சர்மா (வவுனியா)

**ஸ்தானிகர்**
பிரம்மஸ்ரீ சு. வரதராஜ சர்மா
பிரம்மஸ்ரீ வ. சுதர்மன் சர்மா (கோண்டாவில்)

**சர்வசாதகாசிரியர்கள்**
சிவஸ்ரீ ம. தாணுநாதக் குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ ம. சோமசுந்தரக் குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ சே. சிவபாலசர்மா (இணுவில்)
சிவஸ்ரீ ஜெ. கௌரிநாத சர்மா (வவுனியா)

**ஸ்தபதி "கலாவித்தகமாமணி"**
நாவலியூர் சந்திரன்

**பூமாலை அலங்காரம்**
ஸ்ரீகாந்தா நவநீதன் (இணுவில்)

**வர்ணவேலை "கலாபூஷணம்"**
க. சுந்தரலிங்கம்
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)

குறிப்பு: கும்பாபிஷேக கிரியைகளுக்காக பூஜைக்கு வேண்டிய பால், தயிர், இளநீர், சமித்து, பூமாலைகள் மற்றும் அபிஷேகத் திரவியங்கள் போன்றவற்றை உபகரித்து வைரவப் பெருமானின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குமரகோட்டம், கோண்டாவில்.

*ஆலய பரிபாலன சபையினர்.*

## கொழும்புத்துறை கிழக்கில் பாம்புத் தொல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 8
கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் விஷப்பாம்புகளின் தொல்லை கடந்த சில நாள்களாக அதிகரித்துக் காணப்படுவதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை முத்துமாரி அம்மன் கோயிலடி பகுதியில் வீட்டுக்குள் இருந்த விஷ பாம்பு ஒன்று பெண் ஒருவரைத் தீண்டியது.

பாம்புக்கடிக்கு இலக்கான குறித்த பெண் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

முத்திரைப் புடையன், சுருட்டை மற்றும் கருவலையன் போன்ற விஷப்பாம்புகளின் நடமாட்டம் இந்தப் பகுதியில் அதிகரித்துள்ளது.

குறித்த பிரதேசங்களில் உள்ள வெற்றுக் காணிகளில் காணப்படும் புற்றுகள் மற்றும் பற்றைகளில் இருந்தே இந்தப் பாம்புகள் மக்கள் குடிமனைகளுக்கு படையெடுத்துச் செல்கின்றன. (வ-17)

## மருந்தால் பழுத்த மாம்பழங்கள் குடாநாட்டில் மலிவு விலையில்



யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ். குடாநாட்டில் இரசாயன மருந்து வகைகளைப் பயன்படுத்தி பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்கள் சந்தைகளில் விற்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது மாம்பழ சீசன் ஆரம்பமாகியுள்ள நிலையில் மாங்காய் வியாபாரிகள் மரங்களில் இருந்து பறித்து அவற்றுக்கு இரசாயன மருந்துகளை விசிறி பழுக்க வைத்த பின்னர் சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

பார்ப்பதற்கு அழகாக இருக்கும் இந்த மாம்பழங்கள் அவற்றுக்கு உரிய சுவையைக் கொண்டிருக்கவில்லை என்று நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இயற்கையான முறையில் பழுக்க வைத்த பழங்கள் என்று கூறியே அவற்றை வியாபாரிகள் தமக்கு விற்பனை செய்வதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பழங்கள் உண்பதால் சிலர் வாந்தி மற்றும் வயிற்றோட்டத்துக்கு ஆளாகியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலானபழ விற்பனையைத் தடைசெய்து மக்களுக்கு தரமான பழவகைகள் கிடைப்பதை சுகாதாரப் பகுதியினர் உறுதிசெய்ய வேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர். (ஐ-17)

### போரால் அழிவடைந்த

# தென்னைகளின் விவரம் திரட்டல்



யாழ்ப்பாணம், ஜூலை 8
வடபகுதியில் போர் வேளையில் அழிவடைந்த தென்னந் தோட்டங்களின் விவரங்களையும் அந்தத் தோட்டங்களில் மீள்நடுகைத் திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் வைப்பதுதொடர்பான விவரங்களையும் அந்தப் பகுதியில்இயங்கும்தென்னை அபிவிருத்திச் சங்கங்கள் அனுப்பி வைக்குமாறு தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்தசர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை தென்னைச் செய்கையாளர் சங்கத்தின் 19 ஆவது ஆண்டு விழாவுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் இவ்வாறு தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

வடபகுதி தென்னஞ் செய்கையாளர்கள் கடந்த 30 வருடங்களாக தமது தென்னம் தோட்டங்களிலிருந்து பயன் பெற முடியவில்லை எனவும் தோட்டங்கள் தம்மிடம் கையளித்த போது தென்னை மரங்கள் அனைத்தும் அழிந்த நிலையில் பற்றைக் காடாகக் காணப்பட்டதாகவும் இவற்றைத் துப்புரவு செய்து மீள்நடுகையை மேற்கொள்ள உதவிகள் வழங்குமாறு உரிய விண்ணப்பங்கள் அனுப்பிய போதிலும் இதுவரை ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

இதனால் வடபகுதியில் பாதிக்கப்பட்ட தென்னை செய்கையாளர்கள் கிளாலி, எழுதுமட்டுவாழ், பளை, இயக்கச்சி உட்பட்ட பல இடங்களில் தென்னை பயிரிடவில்லை என யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தென்னை செய்கையாளர் சங்கத்தினர் தெரிவித்தமைக்கு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை வடபகுதி தென்னைச் செய்கையாளர் சங்கத் தலைவர் பேராசிரியர் சு.மோகனதாஸ் எதிர்வரும் 21 ஆம் திகதி சங்கக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அன்றைய கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைப்பதாகவும் கூறியதாக சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (வ-9)

## நகை விலையில் ஏற்றத்தாழ்வு


யாழ்ப்பாணம், ஜூலை 8
தங்க நகைகளின் விலைகளில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் குடாநாட்டில் நகை வியாபாரம் பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளதாக நகை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள போட்டியால் தங்க பிஸ்கட்டுகள் சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. இதன் காரணமாக தங்கத்தின் விலை அதிகரிப்பதும் குறைவதுமாக உள்ளது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் தங்க நகைகளின் விலைகள் இன்னும் குறைவடையலாம் எனும் எதிர்பார்ப்பு தோன்றியுள்ளதால் நகைகளை வாங்குவதில் ஆர்வம் காட்டவில்லை.

இந்த நிலையில் குடாநாட்டிலும் நகை வியாபாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இதன் காரணமாக நகைக் கடை உரிமையாளர்கள் கொள்வனவு செய்த நகைகளை உரிய இலாபத்துடன் விற்பனை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ள்ளனர்.

தற்போது சந்தையில் 24 கரட் தங்க நகைகள் 45 ஆயிரத்துக்கும் , 22 கரட் தங்கம் 42 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (வ-14)

## கிணற்றுக்கு பாதுகாப்பு வேலி அமைக்கப்படுமா?



பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திக்கு அப்பால் வலி.கிழக்கு பிரதேச சபையில் கோப்பாய் உப அலுவலகத்துக்கு அண்மித்ததாக உள்ள கிணறு பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. பிரதான வீதியில் இவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் கிணற்றினால் இரவு வேளையில் வீதியால் பயணிப்போர் ஆபத்தான நிலையில் தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் அமைந்துள்ள கிணற்றைச் சுற்றி இதுவரைக்கும் பாதுகாப்பு வேலி அமைக்கப்படாதது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-17)

## டெங்கு ஒழிப்பு தொடர்பான பேரணி



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களால் பேரணி கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது. இதன்போது மாணவர்கள் விழிப்புணர்வு பதாகைகள் தாங்கி நுளம்புக்கட்டுப்பாட்டு வாரத்தை அனுட்டித்தனர். (வ-14)

## டெங்கு பரவும் சூழல் பாடசாலைகளுக்கு எச்சரிக்கை

தென்மராட்சி, ஜூலை 8
தேசிய டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலைகளில் டெங்கு நுளம்பு ஒழிப்புத் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பரிசோதனையின் போது நான்கு பாடசாலைகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ரின்கள், சொப்பிங் பைகள் உட்பட குப்பை கூளங்கள் அதிகளவில் காணப்பட்டன.

இவற்றை ஒரு வாரத்தினுள் துப்புரவு செய்யுமாறும் தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இந்து ஆலயங்களில் வழிபாடு; யாழ். வரும் சுற்றுலாப் பயணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்ப்பாணத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அநேகர் பிரபலமான இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்துக்குள் வெளிமாவட்டங்கள் மற்றும் தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளே இங்குள்ள பிரபல இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வதுடன் நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றி வருகின்றனர்.

குறிப்பாக நல்லூர், நயினாதீவு, கீரிமலை உட்பட பிரபலமான இந்து ஆலயங்களில் சுற்றுலாப் பயணிகளை நாளாந்தம் காணக் கூடியதாக உள்ளது. (ஒ-14)



## காத்தான்குடி டிப்போ ஏறாவூருடன் இணைப்பு



> காத்தான்குடி டிப்போ நிர்வாக நடவடிக்கைகளில் அசமந்தப் போக்குகள் காணப்பட்டன. அத்துடன் இலாபத்திலும் குறைவு ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, ஜூலை 8

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காத்தான்குடி டிப்போ நிர்வாக நடவடிக்கைகளை ஏறாவூர் டிப்போவுடன் தற்காலிகமாக இணைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ரவூப் ஏ.மஜீத் தெரிவித்தார்.

இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

காத்தான்குடி டிப்போ நிர்வாக நடவடிக்கைகளில் அசமந்தப் போக்குகள் காணப்பட்டன. அத்துடன் இலாபத்திலும் குறைவு ஏற்பட்டுள்ளது.

இவற்றை கருத்தில் கொண்டே ஏறாவூர் டிப்போவுடன் தற்காலிகமாக இணைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-10)

# '13' ஐ திருத்துவதற்கு கிழக்கில் பிரேரணையா?

### முன்வைத்தால் எதிர்ப்போம் என்கிறது மு.கா.

கொழும்பு, ஜூலை 8

13 ஆவது திருத்தச் சட்ட வரைவில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு கிழக்கு மாகாண சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டால் அதனை எதிர்த்து வாக்களிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீல் தெரிவித்தார்.



நீதி அமைச்சில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தச் சட்ட வரைவில் திருத்தங்கள் மேற்கொள்ள கிழக்கு மாகாண சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டால் அதனை எதிர்ப்பதாக ஏகமனதாகத் தீர்மானித்துள்ளோம்.

திருத்தங்கள் மேற்கொள்ளக் கூடாதென கிழக்கு மாகாண சபைக்கு முன்னறிவித்தல் கொடுக்கவுள்ளோம். அதனையும் மீறி சமர்ப்பிக்கப்பட்டால் எதிர்த்து வாக்களித்து தோற்கடிப்பதே முடிவாகும்.

இந்த விடயத்தில் கட்சியின் கடும்போக்கினை மீறாமல் அனைவரும் ஒருமித்து செயற்படுவதென கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கட்சித் தலைமைத்துவத்திடம் உறுதி அளித்துள்ளனர்.-என்றார். (ச-10)

## சாரதி பதவி வெற்றிடங்களை கிழக்கில் நிரப்ப நடவடிக்கை


கொழும்பு,ஜூலை 8

கிழக்கு மாகாண அரச சேவை அலுவலகங்களில் நிலவுகின்ற சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாகாணத்தில் கடமையாற்றுகின்ற அரச ஊழியர்களிடம் இருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியானவர்கள் சாரதி பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர் என்று மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலர் எச்.ஈ.எம்.டபிள்யூ. திசாநாயக்க தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். (ச)



திருகோணமலை, மனையாவெளியில் பொது நூலகம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் நகரசபைத் தலைவர் க.செல்வராஜா கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

## செங்கலடி பிரதேச செயலகத்தை பார்வையிட்டு வரும் அரச அலுவலர்கள்

மட்டக்களப்பு,ஜூலை 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் தற்போது முன்மாதிரியாகக் கருதப்படும் செங்கலடி பிரதேச செயலகத்தை பார்வையிடுவதற்காகப் பல அரச திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள் வருகை தந்த வண்ணமுள்ளனர்.

செங்கலடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஆக்கபூர்வமான அர்ப்பணிப்புக்கள் மற்றும் கடின உழைப்பு காரணமாக உருவாக்கப்பட்டுள்ள 5 எஸ் நிர்வாக ஒழுங்கமைப்புக்கள் மற்றும் மாதிரித்தோட்டம், அரும்பொருள் காட்சியகம், நூலகம், மாவட்டத்தில் முதலிடம் பிடித்த கிராம சேவையாளர் அலுவலகம் உள்ளிட்ட பல விடயங்களைப் பார்வையிடுவதற்காகவே இவ்வாறு பல அரச, தனியார் திணைக்களங்கள் வருகை தருவதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தை பார்வையிடுவதற்காக திருகோணமலை மாவட்ட வெருகல் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் வருகை தந்து சென்றுள்ளனர்.




அரச உத்தியோகத்தர்களைக் கண்டு பொது மக்கள் பயப்படும் வகையில் நிர்வாகம் நடத்தும் பல திணைக்களங்கள் இருக்கும் போது, பொதுமக்களைக் கண்டு பயந்து சேவைசெய்யும் செயலகமாக செங்கலடி பிரதேச செயலகத்தின் நிர்வாக கட்டமைப்புக்கள் அமைந்துள்ளன.

பொதுமக்களுக்கான துரிதசேவையை வழங்குவதற்கான பல செயற்றிட்டங்கள் இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று இந்தப் பிரதேச செயலகத்தைப் பார்வையிட்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.(ச)

## உகந்தை முருகனுக்கு இன்று ஆடிவேல் உற்சவம்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தைமலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்தில் பாலஸ்தாபனம் நடைபெறுவதால் கொடியேற்றம் மற்றும் தீர்த்தம் இடம்பெறமாட்டா. ஆனால் வழமையான திருவிழாக்கள் நடைபெறும் என்று ஆலய செயலர் கே. ஸ்ரீ பஞ்சாட்சரம் தெரிவித்தார்.



இன்று ஆரம்பமாகும் உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந்த ஆலயத்துக்குச் செல்ல விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உற்சவம் நிறைவடைந்த பின்பு எதிர்வரும் 25 ஆம் திகதி கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை திறந்துவிடப்படும். இதேவேளை கதிர்காமக் கொடியேற்றம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## விபத்தைக் குறைக்க வேலைத் திட்டங்கள்

வாழைச்சேனை,ஜூலை 8

நாட்டில் இன்று அதிகரித்து வரும் வீதி விபத்தினைக் குறைக்கும் நோக்கில் மோட்டார் வர்கன பரிசோதகர் திணைக்களமும், பொலிஸ் திணைக்களமும் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

அதன் அடிப்படையில் வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு, 'சட் டத்தை மதித்து பிரதான வீதியைப் பாவித்து வீதி விபத்தினைத் தடுத்து உங்கள் பாதுகாப்பினை உறுதிப்படுத்துங்கள்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் எஸ்கோ நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் பி.பிரபாகரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் குறுந்திரைப் படமும் காண்பிக்கப்பட்டது. (ச)

# மத்திய மாகாணசபை தேர்தல் சூடுபிடிப்பு

## வேட்பாளர் தெரிவு குறித்து கட்சிகள் ஆலோசனை

கொழும்பு,ஜூலை 8
மத்திய மாகாணசபைக்கான தேர்தல் மாகாண சபை கலைக்கப்பட்ட ஆரம்ப நாளிலிருந்து சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.
மத்திய மாகாணத்திலுள்ள கண்டி, மாத்தளை , நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பிலும் வேட்பாளர் தெரிவு தொடர்பிலும் அரசியற்கட்சிகள், தொழிற்சங்க அமைப்புக்கள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றன.
இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவர்களின் சுவரொட்டிகள் கண்டி மாவட்டத்தில் ஒட்டப்பட்டுள்ளன.
மத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் சுவரொட்டிகளே பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.
58 உறுப்பினர்களைக் கொண்ட மத்திய மாகாண சபைக்கு கண்டி மாவட்டத்திலிருந்து 30 உறுப்பினர்களும் நுவரெலியா மாவட்டத்திலிருந்து 16 உறுப்பினர்களும் மாத்தளை மாவட்டத்திலிருந்து 10 உறுப்பினர்களும் போனஸ் ஆசனம் முறையில் இரண்டு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.
கண்டி மாவட்டத்தில் 30 உறுப்பினர்களைத் தெரிவு செய்து கொள்வதற்காக ஒவ்வொரு அரசியல் கட்சியிலிருந்தும் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவிலிருந்தும் 33 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.
நுவரெலியா மாவட்டத்தில் 16 உறுப்பினர்களைத் தெரிவு செய்து கொள்வதற்காக ஒவ்வொரு அரசியற்கட்சியிலிருந்தும் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவிலிருந்தும் 19 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.
மாத்தளை மாவட்டத்தில் 10 உறுப்பினர்களைத் தெரிவு செய்து கொள்வதற்காக ஒவ்வொரு அரசியற்கட்சியிலிருந்தும் ஒவ்வொரு சுயேச்சைக்குழுவிலிருந்தும் 13 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.
இந்த நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்திய மாகாணசபைத் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பாக 36 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக 22 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## காற்றின் வேகம் அதிகரிப்பு மீனவர்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு,ஜூலை 8
புத்தளம் முதல் காலி வரையிலான கடற்பரப்பில் காற்றின் வேகம் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுவதுடன் கடல் சீற்றம் அதிகரித்துக் காணப்படும் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.
இது குறித்து கரையோர மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று காலநிலை அவதான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.
நாட்டின் ஏனைய பகுதிகளில் மணிக்கு 30 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ச)



தேசிய விவசாய வாரம் மற்றும் விவசாயக் கண்காட்சி ஆகியவற்றை வாரியபொலவிலுள்ள வடமேல் மாகாண விவசாய நிலையத்தில் ஜனாதிபதி சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.
அமைச்சர்களான மஹிந்த யாப்பா அபேவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அநுரபிரியதர்ஷன யாப்பா, டி. பி. ஏக்கநாயக்க மற்றும் அதிகாரிகள் சகிதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்காட்சியைப் பார்வையிடுகின்றார்.

### சர்வதேசத்தின் கவனத்தை

## திசை திருப்புவதற்கே மத்திய,வடமேல் தேர்தல்

கொழும்பு,ஜூலை 8
வட மாகாணசபைத் தேர்தலில் அரசு தோல்வியை எதிர்பார்ப்பதாலேயே மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தலை நடத்தி சர்வதேசத்தின் கவனத்தை திசை திருப்ப முற்படுகிறது.



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சி மத்திய குழுக் கூட்டம் கம்பளை நகர சபை மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவது நிச்சயம். தற்போது மின் பட்டியல் மக்களின் கைகளுக்குக் கிடைத்துள்ளமையால் மின்கட்டண அதிகரிப்பின் விளைவுகளை மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சி கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு உண்மையை விளக்குவதற்கான வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
அரசு சர்வதேசத்துக்குக் காட்டுவதற்காக வட மாகாண சபைத் தேர்தலை நடத்துகின்றது. ஆனால், இந்தத் தேர்தலில் அரசு தோல்வியடைவது நிச்சயம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

> அரசு சர்வதேசத்துக்குக் காட்டுவதற்காக வட மாகாண சபைத் தேர்தலை நடத்துகின்றது.

## வர்த்தமானி அறிவித்தல் அடுத்தவாரம்

கொழும்பு,ஜூலை 8
வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளின் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கோரும் வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.
வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகள் கலைக்கப்பட்டிருப்பதுடன், வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி, தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.
இந்தநிலையில் மூன்று மாகாண சபைகளுக்குமான வேட்புமனுக் கோரும் வர்த்தமானி அறிவித்தல் ஒரு வார காலத்துக்குள் அறிவிக்கப்படும் என்று பிரதித் தேர் தல்கள் ஆணையாளர் எம். எம்.மொஹமட் தெரிவித்தார்.
தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 14 நாள்கள் முதல் 21 நாள்களுக்குள் வேட்புமனுக்கள் கோரப்படும். அதன் வேட்புமனுக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் யார் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்பதை தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பார்.
அந்த அறிவித்தல் வெளியாகி 8 வாரங்களுக்குள் ஒரு சனிக்கிழமை தேர்தல் நடத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## மாகாண சபைகளுக்கான வேட்பாளர் தெரிவு 15 இல்

கொழும்பு,ஜூலை 8
வடமாகாண, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைத் தேர்தல்களுக்கான இலங்கை சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.
இந்த மூன்று மாகாண சபைத் தேர்தலில் புது முகங்களும் அறிமுகம் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று கட்சியின் பொதுச் செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
குற்றமிழைத்த எவரும் வேட்பாளர்களாக நியமிக்கப்பட மாட்டார்கள் என்று அவர் கூறினார். 30 ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவது இந்த



நாட்டு மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

## இந்தியாவுடனான உறவு பலமாகவே இருக்கிறது

கொழும்பு,ஜூலை 8
இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவு தொடர்ந்தும் பலமாக இருக்கிறது. அது சீரான நிலையில் முன் நகர்ந்து வருகிறது என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.



கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பேச்சுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்திய அரசின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார் என்று அவர் கூறினார்.
இரு நாடுகளும் பரஸ்பர புரிந்துணர்வுடன் இணைந்து செயற்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சீனாவிடமிருந்து கடன் பெறுகிறது இலங்கை

கொழும்பு,ஜூலை 8
இலங்கை அரசு சீனாவிடம் இருந்து கடன் பெற்றுக் கொள்ளவுள்ளது.
உள்ளூர் பாதைகளை திருத்தும் நோக்கில் 52 பில்லியன் ரூபாவை அரசு சீனாவிடம் இருந்து பெற்றுக் கொள்ளவுள்ளது.அதனை சீன அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது.
அண்மையில் சீனாவிடம் இருந்து இலங்கை 2.2 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒற்றுமைக்கான பேரணியின் பணி உரிய விளைவைத் தருவதற்கு...

இலங்கையில் ஒரு வகை வன்முறைக் கலாசாரம் நிலவுவதும் அது வேகமாக வளர்ந்து வருவதும் ஒன்றும் இரகசியமல்ல. அதற்குப் பிரதான காரண கர்த்தாக்கள், இன, மதக் கடும் கோட்பாட்டாளர்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. நாட்டில் கடந்த சுமார் ஒரு வருடத்தில் மத, இன பாகுபாட்டு உணர்வாளர்களால் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு பரவலாகப் பல வகைத் துன்புறுத்தல்களும் சேதங்களும் விளைவிக்கப்பட்டிருந்தன. அவை குறித்து அவ்வப்போது இப்பத்தியில் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை வாசகர்கள் அறிந்ததே.

அதனை ஒப்புக்கொள்ளும் வகையில் (பாணியில் என்றும் சொல்லலாம்), ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான , கலாசார அமைப்பின் (UNESCO) இலங்கைக்கான பிரதிநிதி பேராசிரியர் கருணாரத்ன கங்வத்த கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆயினும், நம்நாட்டு ஜனாதிபதி இத்தகைய கடும் போக்கிற்கு எதிரானவர், அதனை எந்த வகையிலும் ஆதரிக்காதவர் என்றும் பேராசிரியர் கங்வத்த விளம்பி உள்ளார்.

நாட்டு மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துக் கூறுவதற்காக, பகிரங்கப்படுத்துவதற்காக நடத்தும் கூட்டங்களுக்கு , பொலிஸாரும் இராணுவத்தினரும இடையூறு விளைவித்ததாக நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன கண்டித்துள்ளார்.

இத்தகைய சூழமைவில் 'ஒற்றுமைக்கான பேரணி' என்ற அமைப்பு, நாட்டின் சகல மக்களும் சமாதானத்துடனும் சம உரிமைகளுடனும் வாழ்ந்து, நாம் பிறந்த நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற நோக்குடன் இயங்கத் தொடங்கி உள்ளது.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே என்று மகாகவி பாரதியார் விதந்துரைத்த கோட்பாட்டுடன் செயலாற்றும் போக்குடன் , தலைநகர் கொழும்பில் ''கிறீன்பாத்''தில் ஒற்றுமைக்கான முதலாவது பேரணியை நடத்தி இருந்தது.

அதற்குக் கிடைத்த ஆதரவைத் தொடர்ந்து இரண்டாவது பேரணியை நேற்று மாத்தறையில் நடத்துவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

தேவையற்ற பூசல்கள், பாகுபாடுகள், துவேசங்களை மக்கள் மத்தியில் விதைக்கும் சக்திகளை ஆதரிக்காது இருக்கவும், அடுத்தவர்களின் அரசியல், இன, மத உரிமைகளைச் சீண்டுவோரின் பக்கம் சாய்ந்துவிடாது, தடுத்து நிறுத்தவும் ''ஒற்றுமைக்கான பேரணி '' இயக்கம் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல பிரதேசங்களிலும் வாழும் மக்களை தாராளவாதத்தை நாடிச் செயற்படுவதற்கும், ஒரு சாரர் மீது மறு சாரார் வெறுப்புக் கொள்வதற்கு எதிரான பலத்தைக் காட்டுவதற்கு - அதனைக் கட்டி வளர்ப்பதே '' ஒற்றுமைக்கான பேரணி '' இயக்கத்தின் இலக்கு என்று அதன் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபைக்கு முதல் முறையாகவும் கலைக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண சபை, மத்திய மாகாண சபை ஆகியவற்றுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் இவ்வேளையில்–

'' ஒற்றுமைக்கான பேரணி '' இயக்கம், மௌனித்து இருக்கும் தாராளவாதிகளை ஒன்றிணைத்துச் செயற்பட முனைந்திருப்பது தகுந்த தருணம் மட்டுமன்றி–

இன, மத, உரிமைகளை ஒடுக்கி, அமிழ்த்தி, சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் கீற்றுக்களாகக் கிழித்து நாட்டில் மேலோங்க முனையும் சக்திகளைச் சாந்தப்படுத்தி நல்வழிக்குக் கொண்டு வர மிகக் கடுமையாக , உறுதி தளராது உழைக்க வேண்டிய காலம் இது.

அதற்கான சக்தியை, பலத்தைத் தன்னால் எவ்வாறு தோற்றுவிக்க வேண்டும் என்பதற்கான வியூகம் ஒற்றுமைக்கான பேரணிக்குத் தேவை.

அதே வேளை, நாட்டில் நல்லாட்சி நிலவ வேண்டும் என்று விழைவோர், அதன் பொருட்டு முன் வந்து உழைப்பதற்கு தடையாக இருக்க வல்ல சக்திகளை, சட்டம், ஒழுங்கை நாடிச் செயற்படுவதற்கு வகை செய்ய வேண்டிய தவிர்க்க முடியாத பெரும் பொறுப்பு அரசின் கைகளிலேயே முழுக்க முழுக்கத் தங்கி உள்ளது.

சாதாரண– வழமையான– வேளைகளை விட, தேர்தல் காலங்களில் திட்டமிட்ட முறையில் வன் செயல்கள் அதிகரிப்பதையும் மிகுந்த கவனத்தில் கொண்டு அரச தரப்பு சட்டம் ஒழுங்கைப் பேணும் என்று எதிர்பார்ப்போமாக.

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையிலான சர்வதேச உடன்படிக்கை

### தன்னிச்சையாக அதனை இலங்கை திருத்த முடியாது. முழுமையாக செயல்படுத்தும்படி இந்தியா மீண்டும் அழுத்தம்

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
■ கோகுலன்

இலங்கைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின்போதுவடமாகாண சபைத் தேர்தல் தொடர்பான விடயமே அதிக முக்கியத்துவம் கொடுத்து அலசப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந்தியாவுக்கு அதன் அழைப்பின் மீது அங்கு பயணம் மேற்கொண்டிருந்த பஸில் ராஜபக்ஷ 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் செய்யப்படவிருக்கும் மாற்றங்கள் குறித்து இந்திய அமைச்சருக்கும் , அதிகாரிகளுக்கும் விளக்கம் அளித்துள்ளார். மூன்று விடயங்களை இந்தியத் தலைவர்களுக்கு தாம் விளக்கிக் கூறியிருப்பதாக பஸில் தெரிவித்திருக்கிறார். வடக்கில் இராணுவ இருப்பைக் குறைப்பது, வடக்கில் ஜனநாயகத்தை மலரச் செய்வது மற்றும் வடக்கின் அபிவிருத்தி என்பனவே அந்த மூன்று விடயங்களும். இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக்கூற முடிந்துள்ளமையால் அமைச்சரின் இந்தியப் பயணம் வெற்றிகரமாக அமைந்தது என்று அரச சார்ந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இருந்த போதும் இலங்கைத் தரப்பில் புதுடில்லியிலோ, கொழும்பிலோ வழமையான அறிவித்தலோ , அறிக்கையோ விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு நேர் மாறாக இந்தியத் தரப்பில் 1987 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் இலங்கைகும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி தான் இலங்கையில் மாகாண சபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எனவே இந்தியாவுடன் ஆலோசனை கலக்காமல் அதில் இலங்கை ஒருதலைப் பட்சமாக மாற்றங்களைச் செய்ய முடியாது என்பது பஸில் ராஜபக்ஷவுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைவர்களால் வாக்குறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் இலங்கை அரசு 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

#### தேர்தலின் பின்னரும் திருத்தம் கூடாது

இதன்படி வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னரும் 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யப்படலாகாது என்றே இந்தியா விரும்புகிறது என்பது புலனாகின்றது.

இந்தியப் பிரதமர் பணியகத்தில் தமிழ்நாடு பாண்டிச் சேரியைச் சேர்ந்த தமிழ் அமைச்சர் வி.நாராயணசாமி அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு விடுத்த விளக்கம் ஒன்றில் இதைத் தெரிவித்துள்ளார். வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் விரிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்த அந்த அறிக்கையின் சில பகுதிகள்:-

ஆரம்பத்தில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ராஜபக்ஷ அரசு உறுதியளித்திருந்தது. இது குறித்து எமது அரசு மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது 13 ஆவது திருத்தத்தை நீர்த்துப்போகச் செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கையில் இறங்கியிருப்பது இலங்கை அதிகாரிகள் மூலமாகவும், அரசியல் தலைவர்கள் மூலமாகவும் நாம் அறிய வருகின்றோம். எனவே இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ பிரதம மந்திரி டாக்டர் மன்மோகன் சிங்கை சந்தித்திருந்தபோது மூன்று முக்கிய விடயங்களை இந்தியப் பிரதமர் வலியுறுத்திக் கூறியிருந்தார். அதில் ஒன்று.

தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தலுக்காளாகக் கூடாது.

இரண்டாவது: போரில் காணிகளை, வீடுகளை இழந்த மக்கள் மீள் குடியமர்த்தப்பட வேண்டும் – மீள்குடியமர்வானது கூடிய வரை விரைந்து செயற்படுத்தப்பட வேண்டும்.

மூன்றாவது 13 ஆவது அரசமைப்புத் திருத்தமானது முற்று முழுதாக செயற்படுத்தப்பட வேண்டும் என்பனவாகும். மேலும் ராஜீவ்காந்திக்கும் ஜயவர்தனவுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒரு சர்வதேச ஒப்பந்தம். இலங்கை அரசாங்கத்துக்குள் செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம் அல்ல அது. இலங்கை அரசுக்குள் செய்து கொள்ளப்பட்டிருந்தால் அது இந்தியாவைக் கட்டுப்படுத்த மாட்டாது. இரண்டு இறைமையுள்ள அரசுகளுக்கிடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் இரு நாடுகளையும் கட்டுப்படுத்தும். இரு நாடுகளிலும் செயற்படுத்தப்பட வேண்டும். இதில் ஓர் அரசு ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று கருதுமானால் அது குறித்து ஒப்பந்தம் செய்து கொண்ட அரசுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டும். அவர்கள் தன்னிச்சையாக ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிடமுடியாது என்று கூறினார் அமைச்சர் நாராயணசாமி.

எனவே இந்தியா துணிச்சலோடு வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக்களைப் பார்க்கும் பஸில் ராஜபக்ஷ புதுடில்லியில் நடத்தியுள்ள பேச்சுக்கள் அதிகம் முக்கியத்துவம் பெறுகின்றன.

13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யும் விடயத்தில் ஆரம்பத்தில் அதி தீவிரம் காட்டிய அரசு பின்னர், நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு அதனை ஏன் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தலையில் சுமத்திவிட்டு அமைதியாக இருக்கிறது என்ற விடயத்தை இது வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உள்ளது.

#### இந்தியாவுடன் முழு அளவிலான ராஜதந்திர மோதல்

அதுமட்டுமல்ல நாடாளுமன்ற தெரிவுக் குழுவும் இப்போது முற்றிலும் அரச தரப்பு குழுவாகவே இருக்கப் போவதுபோல் தெரிகின்றது. இப்பொழுது ஒரு தலைப்பட்சமான மாற்றம் எதுவும் செய்யப்படுவதை தான் விரும்பவில்லையென்று இந்தியா வெளிப்படையாக அறிவித்துள்ள நிலையில் திருத்தத்தை மேற்கொள்ள எடுத்த முயற்சியை அரசு தொடர்ந்து முன்னெடுக்குமா அல்லது இந்தியாவுடன் முழு அளவிலான ராஜதந்திர மோதலுக்கான அபாயத்தை எதிர்கொள்ளுமா என்பது கேள்விக்குறியாக உருவாகியுள்ளது. அதுவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு பெரும் சவாலாக இருக்கப் போகின்றது.

இந்தச் சவாலானது ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா நிறைவேற்றிய இரண்டாவது தீர்மானத்துக்கிசைவாக, நடவடிக்கைகளும் சரி செய்யும் முயற்சிகளும் அரசுத் தரப்பில் மேற்கொள்ளப்படும் தறுவாயில் ஏற்பட்டிருப்பது கவனத்துக்குரியது.

வடமாகாண சபைத் தேர்தல் செப்ரெம்பரில் நடத்தப்படும் என்று அதிகாரப் பூர்வமாக அரசு அறிவித்துள்ளது. தேசிய செயல் திட்டத்தில் நல்லிணக்கக் குழுவின் 50 க்கும் மேற்பட்ட பரிந்துரைகள் மேற்கொண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு ஐந்து தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக 12 சிறப்பு அதிரடிப் பொலிஸ் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். அரசமைப்பில் அவசர சட்ட முன் வரைபு மூலம் கொண்டு வரப்படவிருந்த சட்ட திருத்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் மறக்கப்பட்டுவிட்டது. ஒரு வேளை வடக்கு மாகாணத் தேர்தல் வரையாக இது இருக்கலாம் . இவை எல்லாம் வரும் ஓகஸ்ட் மாதம் மனித உரிமை சபையின் உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வருகை தர இருப்பதையும் செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமை சபை கூடவிருப்பதையும் பின் புலமாக வைத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை எல்லாம் முடிவுற்றதின் பின்னர் இலங்கை அரசின் அரசமைப்புத் திருத்த முயற்சிகள் சர்வதேச சமூகத்தினால் எவ்வாறு நோக்கப்படும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. அடுத்த வரும் மார்ச்சில் மனித உரிமைகள் சபை கூடவிருப்பதன் பின்னணியில் இது பார்க்கப்படும். இலங்கை அரசு தனது வாக்குறுதிகளில் இருந்து மீறிச் செல்லும் நாடு என்று குற்றம் சாட்டப்படலாம். அப்படியான ஒரு நிலையில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கும் என்று கூற முடியாது. கடந்த முறை இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்திருந்தமை தெரிந்ததே.

வடமாகாண சபைத் தேர்தல் முடிவதற்கு முன் வரையாவது அரசமைப்பில் திருத்தம் ஏதும் செய்யாதிருப்பதன் காரணமாக சர்வதேச சமூகம் மற்றும் இந்தியாவிடமிருந்து அரசுக்கு ஒரு நிம்மதி கிடைத்திருக்கிறது. நவம்பர் மாதத்தில் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிக்கலாம். பெரிய தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் வாய்ப்பிருக்கிறது என்ற வகையில் நம்பிக்கை பிறந்திருக்கிறது. இந்தியாவும் உயர் மட்டத்தில் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடும். இவை எல்லாம் வடமாகாண சபை தேர்தல், சங்கடங்கள் எதுவுமின்றி அமைதியாக நடத்தப்படுவதைப் பொறுத்திருக்கிறது.

# நெடுந்தீவில் சிறப்புற நடைபெற்று முடிந்த தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா

இ.சர்வேஸ்வரா

உலகத்திசையாவும் தமிழைக் காவிச்சென்று உலக அரங்குகளில்தமிழ் மொழியின் செழுமையை பழைமையை நிலைநிறுத்தி தமிழுக்கு இன்று செம்மொழி அந்தஸ்து கிடைக்க அன்றே உழைத்த தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் இவ் வருடம் உலகில் தமிழர்கள் வாழும் பாகங்களில் நினைவேந்தல் செய்யப்படுகின்றது. தமிழ்மொழி சார்ந்த ஆய்வுப்பரப்பில் ஆழ மூழ்கிய ஈழத்தமிழர்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக் கூடியது எனினும் அத்தகைய அத்தனை பேரினதும் ஆய்வுவீச்சு இந்தியத்தமிழ் அறிஞர்களையும் மிஞ்சும் அளவுக்கும் அவர்களால் விதந்துரைக்கப்பட்டு வியப்போடு பார்க்கும் அளவுக்கும் ஆழமானது என்பதை எவரும் மறுத்துரைப்பதற்கில்லை. இத்தகைய ஆய்வுப்புல ஆளுமைகளுக்கு நாயகமாக தனித்துவமாக திகழ்பவர் தவத்திரு தனிநாயகம் அடிகள்.

அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகள் தமிழ்மொழி சார்ந்து ஏற்படுத்திய துடிப்புக்கள் கனதியானவை. தனித்து ஒரு மொழியின் இலக்கிய வாழ்வை தாண்டி அம் மொழியின் அரசியல், அம் மொழி சார்ந்த மக்களின் வாழ்வியல், மொழியின் நிலைத்திருப்பு என அத்தனை விடயங்களிலும் அதிக செல்வாக்கைச் செலுத்தியவை தனிநாயகம் அடிகளாரின் தமிழாராய்ச்சி மாநாடுகள்.

இத்தகைய ஆளுமையை மீள ஒரு தடவை ஆராதிக்கும் வாய்ப்பு தமிழர்களுக்கு கிடைத்திருக்கின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ்.மறை மாவட்டமும் இணைந்து தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை அர்த்த மிக்க வகையில் நிகழ்த்திவருகின்றனர். மாவட்ட ரீதியாக வடக்கு மாகாணம் முழுமைக்கும் பாடசாலை மாணவர்களுக்கு போட்டிகள், ஆய்வு அரங்கங்கள், மலர் வெளியீடுகள் எனத் தொடரும் இந் நிகழ்வுகளின் வரிசையில் பிராந்தியங்கள் தோறும் தனிநாயகம் அடிகளின் விழாவைக் கொண்டாடி அடிகளாரின் தன்னலமற்ற தமிழ்ப்பணியை ஆண்டுகள் கடந்தும் கெளரவித்து வருகின்றனர். இந்தகைய அடிப்படையில் அடிகளார் பிறந்த இடமாகிய நெடுந்தீவு மண்ணிலே நிகழ்ந்த விழா இவை அனைத்துக்கும் மகுடம் வைத்தவிழாவாக அமைந்திருக்கின்றது.

தீவகக் கல்வி வலயத்தின் முழுமையான ஏற்பாட்டில் காலை அமர்வு நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் நெடுந்தீவு பொது மக்களின் முயற்சியில் மாலை அமர்வு தனிநாயகம் அடிகள் திறந்தவெளி அரங்கிலும் வெகுசிறப்பாக நடந்தேறியிருக்கின்றது. கடற்படையினரின் துணையோடு யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தமிழ்ச்சங்க உறுப்பனர்கள் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நெடுந்தீவு மண்ணை பாதம் தொட்டதும் நெடுந்தீவு மக்களுக்கே உரித்தான மகத்தான வரவேற்புடன் வரவேற்கப்பட்டனர்.




நெடுந்தீவுக்கு வரும் அத்தனை பேரையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்கும் முதல் மனிதராக திழ்பவர் தனிநாயகம் அடிகள். ஆம் மாவலித்துறையில் அமைக்கப்பட்டுள்ள அவரது உருவச்சிலையைத் தரிசிக்காது எவரும் நெடுந்தீவுக்குள் பிரவேசிக்க முடியாது. அவ் உருவச்சிலைக்கு முதலில் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஏற்பாடாகியிருந்த காலை அமர்வுக்கு மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை முழங்க அழைக்கப்பட்ட விருந்தினர்களும் நெடுந்தீவுப் பாடசாலைகளின் சமூகமும் தனிநாயகம் அடிகளி்ன் உருவப்படத்தை தாங்கிய ஊர்வலமாகச் சென்று அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தீவகக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி செயலாளர் இரா.செல்வவடிவேல், பொருளாளர் ச.லலீசன் ஆகியோர் உரை நிகழ்த்தி தனிநாயகம் அடிகளின் சிறப்பையும் அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதன் மூலமாக அடைய நினைக்கும் இலக்குகளையும் அவைக்கு தெரியப்படுத்தினர்.

மாணவர்களின் கலைநிகழ்வுகள் மிக நேர்த்தியாக காண்போருக்கு கண் செவிசார் சலிப்பைத் தராது படைக்கப்பட்டமைக்கு ஆற்றுகை செய்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களும் வழமைபோல பாராட்டு ஒன்றை மட்டுமே இவ்விடத்தில் பதிவுசெய்ய முடிகின்றது. நல்ல விதைகள் எம்மிடம் உண்டு, விளைநிலத்தை பண்படுத்தி வழங்க வேண்டிய பொறுப்பு நமக்கானது என்பதை பலருக்கு உணர்த்திய நிகழ்வுகளாக அத்தனை கலை நிகழ்வுகளும் அமைந்திருந்தன. குறிப்பாக மழலை மாறாத தரம் ஒன்று மாணவர்கள் பண்பாட்டுடை தாங்கி அரங்கேற்றிய கவியரங்கம் கடல் கடந்து மீள யாழ்ப்பாணம் திரும்பிய பின்னரும் காதுகளில் ஒலித்த வண்ணமிருந்தது.

நிகழ்விடை அரங்கத் தாமதம், நிகழ்வு நீண்டு செல்லல் என வழமையாக எங்கும் இருக்கும் விடயங்களை நெடுந்தீவு மகாவித்தியாலய அரங்கில் காணமுடியாமை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த தீவகக் கல்வி வலயத்தினர் மீதும் நிகழ்வுகளை வழங்கிய பாடசாலைகள் மீதும் கொண்டிருந்த மதிப்புணர்வை மேலும் சற்று உயர்த்தியுள்ளது.

இருப்பினும் சில விடயங்களை சுட்டிக்காட்டுவது எதிர்கால கலை ஆரோக்கியத்துக்கு நன்றாகவிருக்கும். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் ''மீன் மகள் பாடுகின்றாள் வாவி மகள் ஆடுகின்றாள்'' என்ற பாடலை அப்படியே தழுவி மெட்டமைக்கப்பட்ட நெடுந்தீவுக்கான பாடல் புதிய கலைப்படைப்பு ஒன்று குறித்து சிந்திப்பதை தடுத்திருப்பது கவலைக்குரியதே. இவ் விடயத்தில் கவனம் எடுத்தல் தனித்துவமான படைப்புக்களுக்கு வழி திறக்கும்.

மாலை நிகழ்வுகள் அழைப்பிதழ் நேரத்திலிருந்து சற்று தாமதமானாலும் தரமாகவிருந்தன. மறை மாவட்டத்தைச் சேர்ந்த நெடுந்தீவு மைந்தர் அருட்கலாநிதி அ.ப ஜெயசேகரம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி ஜெபநேசன் அடிகளார், தமிழ்ச் சங்கத்தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி, நெடுந்தீவு உதவி அரச அதிபர் ஆ.சிறி, நெடுந்தீவு மக்கள் சார்பிலான விழாவை ஒருங்கமைத்த புலவர் அரியநாயகம், தென்னிந்தியச் திருச்சபை போதகர் தாவீது அடிகள் நெடுந்தீவுப் பரதேச சபைத் தலைவர் பரதம விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

ஜெபநேசன் அடிகள் தனக்கும் தனிநாயகம் அடிகளுக்கும் இடையிலான உறவுநிலை அனுபவத்தின் அடிப்படையில் ஆற்றிய உரை பல வரலாற்றுத் தகவல்களை பதிவுசெய்யும் தளமாக அமைந்திருந்தது.

அரங்கேற்றப்பட்ட கலைநிகழ்வுகள் பல காலை அமர்வில் பாடசாலை அரங்கில் ஆற்றுகை செய்யப்பட்ட நிகழ்வுகளாக இருந்தமை சற்று சலிப்பைத் தந்தாலும் புதிதாக இணைந்திருந்த பார்வையாளர்களுக்கு விருந்தாகவேயிருந்தது.

நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக அமைந்திருந்த பட்டி மன்றம் இரா.செல்வவடிவேல் தலைமையில் குடும்ப பொருளாதாரத்தை பேணுவதில் பெரிதும் முன்னிற்பவர்கள் ஆண்களா? பெண்களா? எனும் தலைப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ச.லலீசன், இ.செந்தூர்ச்செல்வன், எஸ்.தயாபரன், ஜெஸ்.கருணாகரன், லோ.துசிகரன், எஸ்.டேவிட்சன் ஆகியோர் கலந்து கொண்டு சபையின் கரகோசங்களையும் உற்சாக ஒலிகளையும் நள்ளிரவை அண்மித்த பொழுதொன்றில் தமதாக்கிக் கொண்டனர்.

நிகழ்வின் நிறைவாக நெடுந்தீவுக் கலைஞர்களால் முத்தா மாணிக்கமா என்ற நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது. நாலாயிரத்தை அண்மித்த சனத்தொகையை கொண்ட நெடுந்தீவு மண்ணில் நள்ளிரவு தாண்டியும் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வெறும் தரையில் அமர்ந்திருந்து நிகழ்வை ரசித்தமை அம் மக்கள் தனிநாயகம் அடிகளுக்கு அளித்த உளம் சார்ந்த கௌரவமாகும். வறட்சியின் கொடுமையால் மெது மெதுவாய் காய்ந்து போகும் நெடுந்தீவு மண்ணில் தனிநாயகம் அடிகள் நினைவில் ஒரு தலைமழை பொழிந்தமை மீளவும் அம் மண்ணை புத்துயிர்க்கச் செய்திருக்கின்றது.

அடிகளாரின் நூறாண்டு கடந்த வாழ்க்கைத் தடத்தை நெடுந்தீவு மண் மீள ஒரு தடவை தன் நினைவேட்டில் எழுதிக்கொண்டது நல்ல மாற்றங்களுக்கு முதற்படியாக அமையட்டும்.

# கடைசி ஆசை....

மாவீரன் அலெக்ஸாண்டர் எல்லா நாடுகளையும் கைப்பற்றி விட்டு தாய்நாடு திரும்பும் வழியில் நோய்வாய்ப்பட்டார்.பல மாதங்கள் ஆகியும் அவருக்கு அந்த நோய் தீரவில்லை.சாவு தன்னை நெருங்குவதை உணர்ந்தார் அவர்.ஒரு நாள் தன்னுடைய தலைமை வீரர்களை அழைத்து,

''என்னுடைய சாவு நெருங்கி விட்டது. எனக்கு மூன்று ஆசைகள் உள்ளன. அவற்றை நீங்கள் கண்டிப்பாக நிறைவேற்றி வைக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டார்.

அவர்களும் அவற்றை நிறைவேற்றுவதாக வாக்களித்தனர்.முதல் விருப்பமாக,

''என்னுடைய சவப்பெட்டியை எனக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் மட்டுமே தூக்கி வர வேண்டும்.''

இரண்டாவது,

'என்னைப் புதைக்கும் இடத்திற்குச் செல்லும் வழியானது நான் சம்பாதித்து வைத்த, விலைமதிப்பற்ற கற்களால் அலங்காரம் செய்யப்பட வேண்டும்.''மூன்றாவதாக,

''என் கைகள் இரண்டையும் சவப்பெட்டிக்கு வெளியில் தெரியுமாறு வைக்க வேண்டும்.''

வீரர்களுக்கு இந்த ஆசைகள் வித்தியாசமாகத் தெரிந்தன. என்ன காரணமாக இருக்கும் என்று கேட்கப் பயந்தார்கள். அதில் ஒருவன் தைரியமாக முன்வந்து,''அரசே! நாங்கள் தங்கள் ஆசையைக் கண்டிப்பாக நிறைவேற்றுகிறோம்.ஆனால், இதற்கான காரணத்தை தாங்கள் எங்களுக்கு விளக்க வேண்டும்'' என்று கேட்க,அலெக்ஸாண்டர் அதற்கு விளக்கமளித்தார்.

1. என்னுடைய சவப்பெட்டியை மருத்துவர்கள் தூக்கிச் செல்வதால், உலகில் உள்ள எல்லோரும் ஒரு விஷயத்தை அறிந்து கொள்வார்கள்.

மருத்துவர்களால் எந்த ஒரு நோயிலிருந்தும் ஓர் உயிரை நிரந்தரமாகக் காப்பாற்ற முடியாது.

சாவை அவர்களால் நிறுத்த முடியாது. சாவு ஒரு நிதர்சனமான உண்மை .

2. வாழ்க்கையில் எவ்வளவு பணமும், நாடுகளும், இன்ன பிற செல்வங்களும் சம்பாதித்தாலும், அவற்றை யாரும் தன்னுடன் எடுத்துச் செல்ல முடியாது.

அது சவக்குழி வரை மட்டும்தான்..! மனிதர்கள் வீணாக சொத்துக்கள்,செல்வங்கள் போன்றவற்றின் பின்னால் செல்ல வேண்டாம் என்பதைத் தெரியப்படுத்துவதற்காக!

3. உலகையே வென்றவன் இந்த மாவீரன் அலெக்ஸாண்டர், சாகும்போது கைகளில் ஒன்றுமில்லாதவனாகத்தான் இருக்கிறான் என்று அறிந்து கொள்வதற்காக..

நாமும் இந்த வாழ்க்கையைத் தான் வாழ்ந்து வருகின்றோம். எப்போதும் பணம்,பணம்,பணம்தான். நாம் அனைவரும் அதன் பின்னால் ஓடிக் கொண்டே இருக்கின்றோம். அலெக்ஸாண்டரின் கதையைப் படித்துக்கொண்டுஇருந்த வேளையில் கவியரசு கண்ணதாசன் அவர்களின் ஒருதிரைப்பாடல் ஒலிக்கிறது. அதை மறைந்த ரி.எம்.எஸ். உயி



ரோட்டமாக பாடினார்.

''வீடு வரை உறவு,
வீதி வரை மனைவி,
காடு வரை பிள்ளை,
கடைசி வரை யாரோ...''

நீங்களும் உண்மையை உணர்ந்து செயற்படலாமே .......

# வாழ்க்கை

## 12 ஒரு வரைபடம்



■ நிவேதிதா மோகன்.

நிலா நடந்த எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறினாள். ஜெனியும் சந்தோஷமாக அவளை வரவேற்றாள்.

மறுநாள் காலை பாடசாலை முதல்வரிடம் இருந்து நிலாவுக்கு அழைப்பு வந்தது.நிலாவும் அது என்னவாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு சென்றாள்.

அங்கு நிலாவின் சித்தப்பாவும் ஆகாஷும் நின்றனர். நிலாவைப் பார்த்தவுடன் ஆகாஷ் ஓடி வந்து அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். அவனை அணைத்து கொண்டே சித்தப்பாவை பார்த்தாள். உடனே சித்தப்பா நிலாவை பார்த்து எங்களோடு வா, சித்தி அப்படி தான் என்று பணிவாகக் கேட்டார். அதற்கு நிலா இல்லை சித்தப்பா, என்னை மன்னித்து விடுங்கள். என்னால் ஒரு குடும்பத்தில் பிரச்சனை வேண்டாம் என்று கூறினாள். நிலாவின் கல்லூரி முதல்வரும் நிலா விடுதியில் இருந்து படிப்பது தான் அவளிற்கு நல்லது என்று கூற வேறு வழியில்லாமல் வீடு திரும்பினார்கள்.

அதன் பின் அவளின் அறைக்கு மீண்டும் சென்று ஜெனியுடன் கல்லூரிக்கு வந்தாள். அங்கு இதைப் பார்த்த மற்ற நண்பர்கள் வியந்து போய் நிலாவிடம் விடுதிக்கு வந்த காரணத்தைக் கேட்டனர்.நிலா எல்லாவற்றையும் விளக்கமாக கூறினாள்.

நிலாவின் வாழ்க்கை முதல் இருந்ததை விட சந்தோஷமாக இருந்தது . நல்ல படிப்பு, பாதி நேர வேலை. அதன் காரணமாக பணம் சம்பாதித்து அம்மாவுக்கு அனுப்பினாள். நிலா அவளது குடும்பத்தை அப்பா இல்லாத கவலை தெரியாமல் முன்னேற்றினாள்.படிப்பில் வகுப்பிலேயே முதலாவதாக படித்து வந்தாள். இதனால் நிலா மீது எல்லோருக்கும் ஒரு மரியாதை வந்தது . தனது குடும்பத்தை விட சித்தப்பா குடும்பத்தையும் முன்னேற்றினாள். இதனால் சித்தியும் தனது தவறை உணர்ந்து நிலாவிடம் மன்னிப்பு கேட்டாள். வெளியில் எல்லோருக்கும் நிலா சந்தோஷமாக தெரிந்தாள், ஆனால் நிலாவின் மனதிற்குள் இருக்கும் கவலை யாருக்குமே தெரியாது.

ஒரு நாள் வழக்கம் போல கல்லூரி முடித்து வந்த நிலா, சாப்பிடுவதற்காக தயார் ஆகும் போது திடீர் என நிலாவின் வாயில் இருந்தும் மூக்கில் இருந்தும் இரத்தம் வரத்தொடங்கி விட்டது. உடனே நிலா அது குளிருக்காக இருக்கும் என நினைத்து விட்டுப் போய் தூங்கினாள். இரவு 2.30 மணியளவில் ஜெனி தண்ணீர் குடிப்பதற்காக எழும்பினாள். தண்ணீர் குடித்து விட்டு மீண்டும் படுக்க போவதற்கு முன்னால் நிலாவின் போர்வையைச் சரி செய்வதற்கு சென்ற ஜெனி "திடீர் என அம்மா ...... எனக் கத்தினாள்.பக்கத்து அறைகளில் இருக்கும் நண்பர்களும் ஓடி வந்தனர். ஓடி வந்த நண்பர்கள் , நிலாவைத் திகைத்துப் போய் பார்த்து கொண்டிருந்தனர். காரணம் நிலாவின் வாய், மூக்கு காது என எல்லாப் பக்கத்தாலும் ரத்தம் வந்து கொண்டிருந்தது. தனது போர்வையின் நிலையைக் கண்டு திகைத்து நின்ற நிலா உடனே மயங்கினாள். நிலாவை அவசரமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவசர சிகிச்சை நடந்தது.

நிலாவிற்கு என்ன நடந்தது என்று தெரியாமல் நிலாவின் நண்பர்கள் தவித்தனர்......

நிலாவின் நண்பர்களுக்கு திடுக்கிடும் தகவல் மருத்துவரிடம் இருந்து கிடைத்தது. அதாவது நிலாவுக்கு ரத்தத்தில் புற்றுநோய் இருப்பதாகவும் அதை குணப்படுத்த முடியாதென்றும் நிலா இன்னும் கொஞ்ச நாள் தான் உயிர் வாழ்வாள் என்றும் சொன்னார். இதைக் கேட்ட நிலாவின் நண்பர்கள் திகைத்து நின்றனர். கண்ணீரோடு நிலாவிடம் இந்த விடயத்தைக் கூறாமல் மறைக்க முடிவு செய்தனர்.

> "நிலாவின் வாய், மூக்கு காது என எல்லாப் பக்கத்தாலும் ரத்தம் வந்து கொண்டிருந்தது. தனது போர்வையின் நிலையைக் கண்டு திகைத்து நின்ற நிலா உடனே மயங்கினாள். நிலாவை அவசரமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

# வேலைக்குச் செல்லும் பெண்களிடம் சிறந்து விளங்கும் ஆளுமை



■ பி.விபிசனா

இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக வரும் பெண் படித்து வேலை பார்ப்பவராக இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அதற்கு முக்கிய காரணம் வேலைக்குச்செல்லும் பெண்கள் வாழ்க்கையை எதிர் கொண்டு சமாளிக்கும் ஆற்றல் நிறைந்தவர்களாகவும், உலக அனுபவம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். வேலை பார்க்கும் பெண்களுக்கு வெளி உலக அனுபவங்கள் நிறையவே கிடைக்கின்றன. அந்த அனுபவங்களும் குடும்பத்துக்கு அவசியம் என்பதால் வேலைக்குச் செல்லும் பெண்ணை திருமணம் செய்து கொள்ள ஆண்கள் [illegible] பகிறார்கள்.


வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையைப் பற்றி நன்றாக திட்டமிடுகிறார்கள். காலையில் விழிக்கும் நேரத்திலிருந்து அவர்கள் ஒவ்வொரு வேலையையும் திட்டமிட்டு அந்தந்த நேரத்தில் செய்து முடிக்கிறார்கள்.

[illegible]

[illegible] தங்களை முன்னேற்றுகிறார்கள். நெருக்கடியான நேரத்திலும் தகவல் தொடர்பு கொள்ளும் ஆற்றல் போன்றவை இவர்களிடம் வளர்கிறது.

வேலை பார்க்கும் இடத்தில் பலதரப்பட்ட சக பணியாளர்களோடு பழகுதல், குழுவாக உழைத்தல், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அனுசரித்துச் செல்லுதல், பல்வேறு நெருக்கடிகளை, பொதுமக்களை சந்தித்தல், உயர் அதிகாரி [illegible] பணியாற்றுகிறவர்கள் [illegible]

# விழித்திரு...!



வெற்றி என்பது -உன்னை
மகிழவைக்கும் -பூவல்ல
அடுத்தநிமிடம் -வாடும் பூ
தொடர்ந்து விழித்திரு...
தோல்வி தயாராக.....
இருக்கிறது -வெற்றியை
பறிக்க ...!!!
வெற்றி வாழ்க்கை.....
தரும் ....
தோல்வி வாழ்க்கையை
உணர்த்தும் ....!!!

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் ''திலகம்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

## மானிய உரம் வழங்கப்படாத அக்கராயன் பகுதி விவசாயிகள்

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சி அக்கராயன்குளத்தின் கீழ் சிறுபோக செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் சிலர் மானிய உரத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி அக்கராயன்குளத்தின் கீழ் நடப்பாண்டில் 2 ஆயிரத்து 100 ஏக்கர் வயல் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் தீர்மானிக்கப்பட்ட அளவை விட மேலதிகமாக பயிர்ச் செய்கைகள் இடம்பெற்றுள்ளதாகவும், இத்தகைய செய்கைகளுக்கும் மானிய உரம் வ்ழங்கப்பட்டதால் உண்மையான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.

இதனை கமக்கார அமைப்புக்கள் கிளிநொச்சி அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தின் போது குறித்த விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டது.

**பரிந்துரைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட 2100 ஏக்கருக்குமான மானிய உரம் வழங்கப்பட்டு விட்டது.**

இங்கு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கும் போது;

கமக்கார அமைப்புகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட 2100 ஏக்கருக்குமான மானிய உரம் வழங்கப்பட்டு விட்டதாகவும் மேலதிக உரத்தை இனிமேல் வழங்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை உடனடியாக மேற்கொண்டு சட்ட விரோத பயிர் செய்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-6)

## கிளிநொச்சி, முல்லை. மாவட்டங்களில் கண்ணிவெடியகற்றும் பணிகள் துரிதம்

### ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகள் நிதியுதவி

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் வெடி பொருள்களை அகற்றும் பணிகள் டாஸ் நிறுவனத்தினால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வெடி பொருள்களை அகற்றும் பணிகள் ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் நாடுகளின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, நயிக்குட்டியாறு ஆகிய பகுதிகளில் இந்தப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் ஆனையிறவை அண்மித்த நயிக்குட்டியாற்றுப் பகுதியில் 1992 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரின்போது அமைக்கப்பட்ட மண் அணைகள் கைவிடப்பட்ட காவலரண்கள் ஆகியவற்றிலும் அவற்றை அண்மித்த பகுதிகளிலும் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் அந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது வெடிக்காத நிலையில் புதையுண்ட நிலையில் காணப்படும் வெடி பொருள்களை அகற்றும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மிகவிரைவில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டதும் குறித்த பகுதிகளை பயிர்ச் செய்கை மற்றும் கட்டுமான நடவடிக்கை களை மேற்கொள்ளும் பொருட்டு மக்களிடம் கையளிக்கவுள்ளதாக கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, சுதந்திரபுரம் மணலாறு ஆகிய பகுதிகளிலும் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை வெடிபொருள் ஆபத்தைக் காரணம் காட்டி குறிப்பிட்ட சில பகுதிகளில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படாமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மின்சார விநியோகம், வீதிப் புனரமைப்பு , குளங்களின் புனரமைப்பு என்பன தாமதமடைவதாகத் தெரிய வருகின்றது. (க-12)

## பாரம்பரிய இசைக் கருவிகள் வழங்கல்

கிளிநொச்சி, ஜூலை 8


கிளிநொச்சி சென் தெரேசா பெண்கள் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பாரம்பரிய இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் இந்த இசைக்கருவிகளை கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் ஆகியோருடன் இணைந்து வழங்கினார்.

இசை மற்றும் நடனக் கலைகளைப் பயிலவும் இன்னிய நடனத்தை மேற்கொள்ளவும் இந்த இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.



வன்னிப் பிரதேசத்திலுள்ள ஒரேயொரு பெண்கள் பாடசாலை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (க)



மாந்தை கிழக்கு சிறாட்டிகுளத்தில் அமைந்துள்ள பிரதான வீதியின் அவல நிலை.

## புத்தகங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 8

மாணவர்களின் வாசிப்புத்திறன் விருத்திக்கும் படைப்பு முயற்சிகளை ஊக்குவிக்கவும் கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளுக்கு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி புத்தகங்கள் புலம்பெயர் தமிழ்ப்படைப்பாளியான இளங்கோ என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஈழத்துப் படைப்பாளிகள், எழுத்தாளர்கள், கல்வியாளர்களின் புத்தகங்கள் இந்தத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இயக்கச்சி அ.த.க. பாடசாலை, கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலை, ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கே இந்தப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கணேசலிங்கம், ஆசிரிய ஆலோசகர் எம்.விஜயநாதன், பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.ஆனந்தசிவம் உள்ளிட்ட அதிகாரிகளும் பெற்றோரும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர். (க)

## கோணாவில் பகுதியில் தீக்கிரையானது இளம் விதவைப் பெண்ணின் குடிசை

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சி கோணாவில் புதிய குடியிருப்புப் பகுதியில் விதவைப் பெண்ணொருவரின் வீடு விசமிகளால் எரியூட்டப்பட்ட சம்பவம் இப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோணாவில் யூனியன் குளம் புதியகுடியிருப்புப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இரண்டு குழந்தைகளுடன் வாழ்ந்து வரும் விதவைப் பெண் ஒருவரின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஆடைகள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக குறித்த பகுதி கிராம அலுவலரிடமும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் சட்டவிரோதமான மதுபான விற்பனை இடம்பெறுவதாக கிராம அலுவலர் மற்றும் இராணுவத்துக்குக் கிடைத்த தகவல்களையடுத்து அந்தப் பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த தகவலை அந்த விதவைப் பெண்ணே வழங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இங்குள்ள சிலர் அவரை தூற்றியதாகவும் அதன் பின்னர் வியாழன் இரவு அந்தப் பெண்ணின் வீட்டுக்கு மண்ணெண்ணெய் ஊற்றி எரியூட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அயலவரின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டதால் ஒரு தொகைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பெண் கடந்த போரின் போது தமது கணவனை இழந்த நிலையில் இரண்டு பெண் குழந்தைகளுடன் வசித்து வருகின்றார். தமக்கு வழங்கப்பட்ட தற்காலிக வீட்டுக்கே தீயிடப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட விதவைப் பெண் தெரிவித்துள்ளார். (க-6)

## பசு மாட்டைக் கட்டிவைத்த ராணுவத்தினர் அதன் உரிமையாளரை அச்சுறுத்தினர்

### கிளிநொச்சி உமையாள்புரத்தில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் பசுமாடு ஒன்றைக் கட்டி வைத்த இராணுவத்தினர் அதன் உரிமையாளரை அச்சுறுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்குச் சொந்தமான பசுமாடு ஒன்றை பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் கட்டி வைத்துள்ளனர்.

மாட்டின் உரிமையாளர் அங்கு சென்று கேட்டபோது தமக்கும் மாட்டுக்கும் தொடர்பில்லையென இராணுவத்தினர் மறுத்துள்ளனர்.

இந்த நிலையில் மாட்டின் உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த இராணுவ முகாமுக்குச் சென்று பார்த்தபோது பசுமாடு கட்டியிருந்ததைக் கண்டுள்ளார். அப்போதும் இராணுவத்தினர் மறுத்துள்ளனர்.

ஆனால் அந்தப் பசுமாடு எவ்வாறோ வீட்டுக்குத் திரும்பி வந்துள்ளது. ஆனால் அந்த வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர் மாட்டை உடனடியாக இராணுவ முகாமில் ஒப்படைக்குமாறு அச்சுறுத்தியுள்ளதாகவும் தம்மைத் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி ஏசியதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பசுமாடு பயிரழிவுகளை ஏற்படுத்தியது என்றும் அதனால் தாம் அதனை இராணுவ முகாமில் கட்டி வைத்ததாகவும் ஆகவே மாட்டைக் கொண்டுவந்து ஒப்படைக்குமாறும் இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

**பசுமாடு பயிரழிவுகளை ஏற்படுத்தியது என்றும் அதனால் தாம் அதனை இராணுவ முகாமில் கட்டி வைத்ததாகவும் ஆகவே மாட்டைக் கொண்டு வந்து ஒப்படைக்குமாறும் இராணுவத்தினர் கூறியுள்ளனர்.**

பயிரழிவு தொடர்பாக கமக்கார அமைப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இராணுவத்தினர் இவ்வாறு நடந்து கொண்டுள்ளமை தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் தாம் முறையிடவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (க-6)

### தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் விண்ணப்பித்த

# போர்ச்சூழலில் உயிரிழந்த, காயமடைந்த 74 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூலை 8

புனர்வாழ்வு அதிகார சபையால் போர்க்காலச் சூழலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் திட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் 74 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

பீ.அருணாசலம் (ஏ.குகதாஸ்)-மறவன்புலோ, எஸ்.மனோ ரஞ்சன் (எம்.அரவிந்தன்)-கெற்பேலி மேற்கு, எஸ்.துள தஞ்சனி (என்.சுதாஜி)-வரணி இயற்றாளை, ஆர்.கந்தையா (கே.பிரேம்நாத்)-தாவளை இயற்றாளை, பி.தேவராஜா (ரி.சசிகலா)-மீசாலை மேற்கு, வி.பரமசாமி (பீ.பூமணி மலர்)-கைதடி கிழக்கு, கே.பரமேஸ்வரி (எஸ்.கதிரன்)-கைதடி தெற்கு, எம்.தங்கேஸ்வரன் (ரி.தர்சினி)-(வரணி வடக்கு), எஸ்.சரஸ்வதி (எஸ்.விக்னேஸ்வரன்)- மறவன் புலோ,

வீ. மகாலட்சுமி (வீ.மயூரன்)-நாவற்குழி மேற்கு, கே.தெய்வேந்திரன் (ரி.விஜிகரன்)- கெற்பேலி மேற்கு, ஐ.ஈஸ்வரி (ஜ.சிந்துஷா)-கைதடி தெற்கு, கே.செல்வ ரஞ்ஜினி (கே.அனுஷா) -எழுது மட்டுவாழ் வடக்கு, பீ.குணவதி (பீ.கஜிதா)- கைதடி தெற்கு, ஜே.மல்லிகா தேவி (ஜே.நிந்துஜா)-கைதடி தெற்கு, எஸ்.உதயகாந்தி (வீ.செல்வம்)-கெற்பேலி மேற்கு, கே.கணேசன் (ஜீ.சரிதா)-கைதடி தெற்கு, எஸ். அழகம்மா (எஸ்.சண்முகதாஸ்)-கல்வயல்,

ஏ.பாமினி-(எஸ்.அர்ஜுணராஜா)-நுணாவில் கிழக்கு, ஏ.ஜெஸ்மின் கிறேஸ் (ஏ.அருள்நேசன்)-கற்குளி, எம்.ஜனந்தன் (கோ.சர்மிளா) சாவகச்சேரி, கே.மகேஸ்வரி (ரி.கிருஷ்ணமூர்த்தி)-கைதடி மேற்கு, வை.சிவபாக்கிய வசந்தா (வை.துஷியந்தன்)-எழுதுமட்டுவாழ் வடக்கு, எஸ்.கோகுலராதா (எஸ்.கோகுலவதனி)-கெற்பேலி மேற்கு, பீ.சர்மிளா (பீ.பிரதீப்)-எழுதுமட்டுவாழ் தெற்கு, வீ.சிவ சோதி (ஏ.வல்லிபுரம்)-மட்டுவில் கிழக்கு, வீ.தேவி (வீ.அகிம்சா)-கைதடி வடக்கு,

எஸ்.குணமணி (எம்.சிவபாதசுந்தரம்)-அல்லாரை தெற்கு, ஆர்.தவமணி (பீ.இரத்தினசிங்கம்)-மீசாலை மேற்கு, ரி.முகுந்தினி (கே.தேவன்)-கெற்பேலி மேற்கு, எஸ்.உதய ரோஜினி (எஸ்.தவமணி)-மீசாலை கிழக்கு, பீ.கண்மலர் (பீ.பிரபாகரன்)-எழுதுமட்டுவாழ் வடக்கு, ஆர்.தயந்தினி (ஆர்-ரமேஸ்)-அல்லாரை தெற்கு, எஸ்.நாகேஸ்வரி (எஸ்.சினேகா)-கைதடி தெற்கு, கே.குணமணி (பீ.குணரத்தினம்)-கெற்பேலி, எஸ்.கணேஸ் (ஜ.பவளம்)-நாவற் குழி தெற்கு எஸ்.புனேஸ்வரி (எஸ்.பானுசங்கர்)-மீசாலை வடக்கு, ரி.தவராசா (ரி.மிதுஷாயினி)- நுணாவில் மேற்கு.

கே.கேதீஸ்வரன்(இடைக்குறிச்சி), வை.ஜெனா சரசாலை வடக்கு, எஸ்.தமயந்தி நாவற்காடு வரணி, பீ.திஷான் மீசாலை மேற்கு, கே.நந்தினி கைதடி கிழக்கு, ஜீ.தனுஷியா கைதடி மத்தி

என்.கலைவாணி- கைதடி கிழக்கு, வீ.மதுஷன்-(நாவற்குழி மேற்கு), ஏ.அருட்செல்வன்- (நாவற்காடு வரணி), ரி.ரமணாகரன்- (வரணி இயற்றாலை), ரி.சுபாகரன்- (வரணி இயற்றாலை), எஸ்.பராசக்தி- (சாவகச்சேரி), எஸ்.விஜிதா- (மந்துவில் வடக்கு), ஜே.டிலக்ஸன்- (அல்லாரை தெற்கு), யு.சிவாஜினி- (வரணி வடக்கு), எஸ்.இரவீந்திரன்- (கைதடி மேற்கு), எஸ்.ரதீஸ்வரி- (கொடிகாமம்), பீ.கதிரேசன்- (கைதடி தெற்கு), ஏ.தர்மானந்தன்- (நுணாவில் மேற்கு), வை.ரங்கநாதன்- (கைதடி மேற்கு),

ரி.பிரதீபன்- (மீசாலை மேற்கு), ஆர்.விஜயராஜன்- (மட்டுவில் வடக்கு), ஏ.தவராசா- (மீசாலை வடக்கு), எம்.துஷ்யந்தினி- (கரம்பைக்குறிச்சி), எஸ்.வினோதன்- (மட்டுவில் கிழக்கு), எம்.கவிதா- (சரசாலை தெற்கு), ஜ.சந்திரா- (குடமியன் வரணி), ஜ.தேவரதன்- (குடமியன் வரணி), ஜெ.நிரோஜன்- (கைதடி தெற்கு), எம்.விவேகானந்தன்- (அல்லாரை தெற்கு), எஸ்.தர்சினி- (கைதடி தெற்கு), கே.யோகேஸ்வரி- (வரணி வடக்கு), ரி.அன்னலட் சுமி- (மந்துவில் கிழக்கு), எஸ்.கிட்டி ணன்- (மிருசுவில் வடக்கு), ஏ.செந்தீபன்- (மந்துவில் கிழக்கு), ஜே.இராஜவதனி- (கரம்பைக்குறிச்சி). (ஒ-9)




ஆஸ்திரேலிய அரசின் சமுதாயப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 'சோ ஆ' நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுக்கான சமாதான கல்வி தொடர்பான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை அண்மையில் கிளிநொச்சி இராமநாதபுரம் அ.த.க. பாடசாலையில் நடத்தப்பட்டது. இதில் பங்குபற்றிய மாணவர்களும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும். (ஒ-14)

# அனுமதி பெறாமல் மரம் தறித்தவர்களில் ஒருவர் கைது

பளை, ஜூலை 8

பளை கரந்தாய் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி பனை மரம் தறித்தவர்களில் ஒருவர் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

காட்டுப் பகுதியில் பனை மரங்கள் தறிப்பதை அவதானித்த பொது மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்பின்பேரில் அங்கு பொலிஸார் சென்று சுற்றி வளைத்த போது சட்ட விரோதமாக பனைமரம் தறித்தவர்கள் தப்பியோட ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

தப்பியோடியவர்களால் கைவிடப்பட்ட கோடரி உட்பட்ட ஆயுதங்களைப் பொலிஸார் கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். (வ-9)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** மனநிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். இளவயது நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**இடபம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் வழங்க வேண்டாம். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**சிங்கம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும்.

**நாளை**

ஆனி-25 செவ்வாய்க்கிழமை 09.07.2013
திதி: பிரதமை பி.ப. 02.45 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் மு.ப.11.26 வரை
சுபநேரம்: 10.28 - 11.58 வரை
இராகுகாலம்: 02.58 - 04.28 வரை

**துலாம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**விருச்சிகம்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச் சோர்வு வந்து நீங்கும். அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**தனுசு:** மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பண வரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 8 | | | 9 | | 5 |
| 3 | 9 | | | 7 | 2 | 6 | 8 | 1 |
| | | | | 9 | | | | 4 |
| | | | | | 4 | | 5 | |
| 1 | | 7 | | 5 | | 2 | | 9 |
| | 6 | | 7 | | | | | |
| 6 | | | | 8 | | | | |
| 7 | 3 | 9 | 2 | 4 | | | 1 | 8 |
| 2 | | 8 | | | 5 | | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 4 | 5 | 7 | 1 | 3 | 2 | 8 |
| 7 | 5 | 3 | 2 | 8 | 6 | 9 | 1 | 4 |
| 1 | 8 | 2 | 4 | 3 | 9 | 7 | 6 | 5 |
| 5 | 4 | 9 | 3 | 6 | 8 | 2 | 7 | 1 |
| 3 | 7 | 6 | 1 | 5 | 2 | 8 | 4 | 9 |
| 2 | 1 | 8 | 9 | 4 | 7 | 6 | 5 | 3 |
| 4 | 9 | 7 | 8 | 2 | 5 | 1 | 3 | 6 |
| 8 | 2 | 5 | 6 | 1 | 3 | 4 | 9 | 7 |
| 6 | 3 | 1 | 7 | 9 | 4 | 5 | 8 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# தேசியப் பிரச்சினையைத் தீர்க்க தனித்து அரசால் மட்டும் முடியாது

## கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் டியூ

யாழ்ப்பாணம், ஜூலை 8
கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை அரசுடன் இணைந்து மக்களுக்கு ஆற்றிய பணியை விட எதிர்க் கட்சியாக இருந்த போது மக்களுக்கு அதிக பணிகளைச் செய்ய முடிந்தது என்று அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிகழ்வு யாழ். கூட்டுறவு மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
நாம் மக்களுக்கு எதனைச் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி அவர்களது சிந்தனையை வளப்படுத்தியிருக்கிறோம்.
இங்குள்ள தேசியப் பிரச்சினையை தனியே இந்த அரசினால் தீர்க்க முடியாது

நேபாளத்தில் 103 மொழிகள் பேசப்படு கின்றன. 125 சமூகங்கள் வாழ்கின்றன. இருந்தும் அங்குள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் மத சார்பற்ற ஓர் அரசை ஏற்படுத்த வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையை அமைத்துள்ளன.

என்றே நாம் கூறுகிறோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் ஐக்கியமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையுள்ளது. எனவே தான் சாதாரண மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுகிறோம்.
இங்குள்ள சாதாரண தமிழ் மக்களோ சாதாரண சிங்கள மக்களோ இனவாதியல்லர், நடுத்தர மக்களே அவ்வாறு உள்ளனர்.
சர்வதேச அரங்கில் நடைபெறும் நிகழ்வைப் பார்க்கும் போது கம்யூனிஸ்ட் கட்சிக்கு சாதகமான நிலையே காணப்படுகிறது.
நேபாளத்தில் 103 மொழிகள் பேசப்படுகின்றன. 125 சமூகங்கள் வாழ்கின்றன. இருந்தும் அங்குள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் மத சார்பற்ற ஓர் அரசை ஏற்படுத்த வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையை அமைத்துள்ளன.
ஆனால் இலங்கையில் இரண்டே மொழிகள் உள்ளன. பல தசாப்தங்களாக இங்கு போர் நிலையே நீடித்துள்ளது.
பிரச்சினையைத் தீர்க்க கம்யூனிஸ்ட் கட்சி எவ்வளவோ அடிவாங்கியது. ஆனாலும் போராட்டத்தைக் கைவிடவில்லை. அதே போன்றே தமிழ் மக்களும், சிங்கள மக்களும் தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-4-86)



காரைநகர், களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றது. அடியார்கள் கூட்டத்துக்கு மத்தியில் வள்ளி, தெய்வயானை சமேதரராய் முருகப் பெருமான் சித்திரத்தேரில் வீதியுலா வந்த வேளையில்... (ஒ)

# மாசேரி கப்பத்தை மயான வீதியை திருத்த ரூ.1 லட்சம்

வரணி, ஜூலை 8
வரணி மாசேரி கப்பத்தை மயான வீதியைத் திருத்துவதற்காக 1 லட்சம் ரூபாவை சாவகச்சேரி பிரதேச சபைஒதுக்கியுள்ளது.
உப தலைவர் க.யோகராசாவின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. ஒப்பந்த வேலையை மாசேரி சனசமூக நிலையம் பொறுப்பேற்றுள்ளது. மூன்று மாதங்களில் இவ்வேலை நிறைவேற்றப் படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-122)

# விஞ்ஞான வாரம் அனுஷ்டிப்பு

தென்மராட்சி, ஜூலை 8
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர்தர விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை விஞ்ஞான வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.
விஞ்ஞான வாரத்தில் இன்றும் நாளையும் விஞ்ஞானக் கண்காட்சியும், புதன்கிழமை புதிர் போட்டியும் வியாக்கிழமை கருத்தரங்கும், வெள்ளிக்கிழமை நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளன. (ந)

# மாசேரி ச.ச.நிலைய நிர்வாகிகள் தெரிவு

வரணி மாசேரி சனசமூக நிலைய பொதுக் கூட்டம் அண்மையில் மாசேரி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி கலந்துகொண்டு சிறப்பித் தார். புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விவரம் வருமாறு:-
தலைவர்- சி.சுப்பிரமணியம், செயலாளர்- சி.அருணாசலம், பொருளாளர்- வ.யோகநாதன், உபதலைவர்- சோ.யோகேஸ்வரன், உபசெயலாளர்- சி.நவரத்தினம், நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.காங்கேசு செ.விநோதன், க.சின்னத்தம்பி, வே.திருச்செல்வம் வீ.சிவபாதசுந்தரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கணக்காய்வாளராக கா.சிவகுருநாதன் தெரிவு செய்யப்பட்டார். (ஒ-122)


## ஆறுதல் நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்றல் - ஊக்கிகள்

தமிழ் மொழிமூலம் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் எமது நிறுவனத்தால் வழங்கப்பட்டுவரும் கற்றல்-ஊக்கிகள் மூன்றாம் தவணைக்கும் வெளிவரவுள்ளன.

| தரம் | பாடங்கள் |
|---|---|
| 4. | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 6. | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 9,10 | தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு |
| 11 | தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, + மாதிரி வினாத்தாள் |

★ ஆசிரியர், மாணவர்களின் கற்றல் கற்பித்தலை இலகுவாக்குவன
★ தேர்ச்சி மட்டங்களின் அடிப்படையானவை
பெறவிரும்புவோர் 20.07.2013 ஆம் திகதிக்கு முன் தேவையான தொகையைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

ஆறுதல்,
51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: T.P: 021 2217092
(சி/10263) (10,6,3)
சுந்தரம் டிவகலாலா
பிரதம நிறைவேற்று அதிகாரி.







வெற்றி நாயகர்களுக்கு
நன்றி
நவில்கின்றோம்

சமுர்த்தி என்னும் தீபம் மூலம்
எம் வாழ்விற்கு ஒளியேற்றி வைத்த
அங்கஜன் இராமநாதன்
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான அமைப்பாளர்
-யாழ். மாவட்டம்)
அவர்களுக்கும் மற்றும் இணைப்பாளர்
உதயசீலன் அவர்களுக்கும்



எமது மனமுவந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு,
அவர்கள் சகல சௌபாக்கியங்களோடு நீடூழி
வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்:
புதிதாய் நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள்
கோப்பாய்ப் பிரதேசம்.
(30676)(10,6,3)


## பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமனம்

தென்மராட்சி, ஜூலை 8
தென்மராட்சி கல்வி வலயத்தில் தமிழ் பிரிவு உதவிக் கல்விப் புணிப்பாளராக கடமையாற்றும் க.சின்னத்துரை எதிர்வரும் 17 ஆம் திகதி பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றவுள்ளார்.
தற்போது பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி எதிர்வரும் 26 ஆம் திகதி சேவையிலிருந்து இளைப்பாறவுள்ளார். (ந-9)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



மானிப்பாயைச் சேர்ந்த கிருஷ்ண சாமி சதீஸ் குமார் அகில இலங்கை சமா தான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார்.
மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் பழைய மாணவனான இவர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப் பினரும், புத்தூர் ஐ.சி. எஸ். கணினிக் கல்வி நிறுவனம் மற்றும் லிற் றில் மாஸ்ரர் பாலர் முன்பள்ளியின் நிர்வாக இயக்குநரும் ஆவார். (ஒ-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வே.க.இரத்தினகுமார் - B.A, Dip.in Ed, M.Ed, SLPS-I



எமது கல்லூரியின் அதிபர் மதிப்பிற்குரிய
வே.க.இரத்தினகுமார் அவர்கள்
அதிபர் சேவை தரம் I இற்கு 01.01.2006
முதல் பதவி உயர்வு பெற்றமையையிட்டு
அவரை மனமாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்
யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. ஆசிரியர் கழகம்.

## கோட்டை முனீஸ்வரர் உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய மணவாளக் கோல அலங்காரத் திருவிழா இன்று திங்கட்கிழமை சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 26 நாள்கள் நடைபெறும். தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும் மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெறும். எதிர்வரும் முதலாம் திகதி மாலை இரத உற்சவமும் மறுநாள் காலை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ஓ)

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த

Koyo

Value & Technology MADE IN JAPAN

KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO
எப்பொழுதும் நாம் உங்களுடன்

ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

# மாணவர்களுடைய படைப்பு இலக்கியத்துக்கு ஒப்பானது

### புகைப்பட கண்காட்சியில் கலைப்பீடாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

சிறார்களின் படைப்பு ஆக்க இலக்கியத்துக்கு ஒப்பானது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை நடைபெற்ற 'வாழ்வியலோடு இணைந்த தேடல்' சிறுவர் புகைப் படக் கண்காட்சியில் கலந்து கொண்டு



> மக்களின் அன்றாட வாழ்வை பிரதி பலிக்கும் வகையில் மாணவர்களின் படைப்புக்கள் அமைந்துள்ளன.

உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது: இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் மாண வர்களின் அழகியல் உணர்வை வெளிப்படுத்துகின்றன. தமது வயதுக்கும் அறிவுக்கும் ஏற்ற வகையில் புகைப்படக் கருவிகளை மாணவர்கள் கையாண்டுள்ளனர். மாணவர்கள், குழந்தைகள் மாசு, மறு அற்றவர்கள்.

புகைப்பட நுட்பங்கள் தெரியாவிட்டாலும் மாணவர்களின் புகைப்படங்களில் நுட்பங்கள் உள்ளன. குழந்தைகள் பல காட்சிகளை சிறைப்படுத்தி உள்ளனர்.

மாணவர்களை சிறந்த வழியில் நெறிப்படுத்தினால் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த படைப்பாளிகள் ஆவர். மாணவர்களுக்கு சமூகப் பொறுப்பு அதிகம் உண்டு.-என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் உரையாற்றுகையில்:

மக்களின் அன்றாட வாழ்வை பிரதிபலிக்கும் வகையில் மாணவர்களின் படைப்புக்கள் அமைந்துள்ளன. மாணவர்களின் இத்தகைய ஆர்வம், எதிர்காலத்தில் அவர்கள் ஊடகத் துறை யினை கற்க வழிகாட்டும். -என்றார்.

இதேவேளை மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று புகைப்படங்களை எடுத்துள்ளமை அவர்களின் திறனை வெளிக்காட்டியுள்ளது என்று ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்கள் தெரிவித்தனர். (ச-10)




**காணி விற்பனைக்குண்டு**

அச்சுவேலி தெற்கு, வண்ணக்கன் கிரியும் பிரப்பந்தாழ்வும் நிலப்பரப்பு 07 குளி 4¼ எனும் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 491 1974
தாயுமானவர் நிகேதன் (30675) (3.6.11)

**விற்பனைக்குண்டு**

சொக்கட்டான் பந்தல், பொக்ஸ் செற், அன்பு மிக்சர் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 917 3861, 077 448 2781 (30673)(3.6.11)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

பலாலி வீதி உரும்பிராய் வடக்கு பிரதேசசபைக்கு அருகில் கிழக்குப்பக்கமாக செல்லும் பாதையில் 3ஆவது காணியில் 5 அறைகளுடன் நல்ல நிலையில் 5½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மேலும் இக்காணிக்குள் இன்னும் ஒரு வீடு அமைக்க இடமுண்டு.

தொடர்பு: 021 300 2256

**உணவகம் வாடகைக்கு**

767, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் மருத்துவமனையுடன் இணைந்த அசைவ உணவகம் (கொத்துறொட்டி உட்பட) வாடகைக்கு விடப்படும் இது 45' X 15' = 675 சதுர அடி அளவுடைய சகல தளபாட, குளிர்சாதன வசதிகளைக்கொண்டது. தொடர்பு: நேரில் அல்லது தொலைபேசி எண் 021 222 3175, முன்பு நடத்தியவர் வெளிநாடு சென்றுவிட்டார். ஸ்ரோராகவும் பாவிக்க முடியும்

## 31 ஆம் நாள் நினைவலைகள்

எமது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்
திருமதி கலையமுதா நிமலன் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் முத்துவேலு சீவரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.**

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 08 |
| 03 | 07 |
| 1941 | 1993 |

**அமரர் சிதம்பரி மகேந்திரன்**
(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆண்டுகள் இருபது ஆனாலும்
பாரில் நாம் வாழும் வரை பசுமையாக
நிற்கும் உங்கள் நினைவுகள்
எந்நாளும் காலங்கடந்தவனின் காலடியில்
வாழப் பிரார்த்திக்கும்

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
குடும்பத்தவர்கள்.

(30669)(10.6.3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 | 08 |
| 04 | 06 |
| 1927 | 2013 |

**அமரர் திருமதி. வைத்திலிங்கம் சின்னம்மா**
**(மண்கும்பான்)**

எங்கள் குடும்பத் தலைவி சிவபதம் அடைந்ததையிட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும், அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோர்களுக்கும், மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/10306) தகவல்: குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற வுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறும். (ந)

★ ★ ★

வண்ணை அங்குசபாச விநாயகர் ஆலய அலங்கார உற்சவத்தின் 11 ஆம் நாளான இன்று திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெற வுள்ளது. காலை இடம்பெறும் அபிஷேகம், வசந்தமண்டப பூசையை அடுத்து முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். அன்று மாலை 6 மணிக்கு இடம் பெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வெளி வீதியுலா வருவார். (ஒ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 8

திருநெல்வேலி ஸ்ரீ முத்து மாரி அம்பாள் ஆலய வரு டாந்தப் பெருந்திருவிழா வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. வருகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங் கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ந-7)

★ ★ ★

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா வெள்ளிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 13 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

வட்டு வடக்கு துறட்டிப்பனை முத்துமாரியம்மன் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-29)

★ ★ ★

நல்லூர் தூய ஆசீர்வாதப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவிற்கான ஆயத்த வழி பாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி வழிபாடுகள் தினமும் மாலை 5.15 மணிக்கு திருச்செபமாலை வழிபாட்டுடன் நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 5.11 மணிக்கு நற்கருணை விழாத் திருப்பலி நடைபெறும். 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் புனிதரின் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறம். (ந-51)

★ ★ ★

குருநகர் தூய கார்மேல் அன்னை ஆலயத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

தினமும் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நடைபெறும். எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் நடைபெறும்.

அன்று மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலை வழிபாடு திருச் சொரூப பவனியும் தொடர்ந்து அன்னையின் திருச் சொரூப ஆசீரும் இடம்பெறும். (ந-51)

# பொதுக்கூட்டமும் ஆசிரியர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 8

திருநெல்வேலிச் சந்தைக்கு கிழக்குப் பக்க ஒழுங்கையில் தற்போது இயங்கும் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந் தப் பொதுக்கூட்டமும் ஆசிரியர் கௌரவிப்பும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு தாய்ச் சங்கத் தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில் தற்போது பரமேஸ்வரா வித்தியாலயமாகச் செயற்படும் மேற்படி பாடசாலையின் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-4)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் **நவரத்தினராசா சண்முகராசா**
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சிவபாக்கியம் நவரத்தினராசா**

17.04.2013 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக்கல்விப் பணிப்பாளரும்,
நலன்புரி சங்க அலுவலர்களும். (c/10247) (3.6.11)

நலன்புரிசங்கம்
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.

## ஆறாவது மாத நிறைவில் அஞ்சலிகள்

தோற்றம்
07.06.1964

மறைவு
08.02.2013



அமரர் கிருஷ்ணன் அன்பழகன் (கண்ணன்)

நெஞ்சை வாட்டும்
நினைவுகளுடன் கண்ணா!

உன் அப்பா, அம்மா, சகோதரர்
மனைவி, பிள்ளைகள்

244/4, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## மூன்றாண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
03.05.1933

ஆண்டவன் அடியில்
08.07.2010

**அமரர் பிலிப்பு சூசைப்பிள்ளை**
(முன்னாள் ஆசிரியர், புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம்)

அகல் விளக்காய் ஒளி தந்து அணைந்துவிட்ட அப்பா!
ஆல மரமாகச் செழித்த வாழ்வில் ஆணிவேரின் பலமிழந்தோம்
இனிய உங்கள் முகம் தேடி
ஈசன் தாழ் நாடி
உளம் நொந்து புலம்புகின்றோம்
ஊமையாகிவிட்டீர்களா அப்பா!
எம் நலம் காத்து நல்வழி காட்டி
ஏற்றமது காணும் நாளில் இறைவாழ்வில் இணைந்தீர்கள் என்பதில்
ஐயமில்லை என மனம் அமைதியாகின்றது அப்பா!
ஒட்டுறவாய் வாழ்ந்த எமக்காய் - இறைவனிடம்
ஓதி, நல்லருள் பெற்றுயர்ந்து யேசுவின்
ஔவியர்களாய் வாழ வேண்டுவீர் அப்பா.

என்றென்றும் நினைவகலா அன்பு நிறைந்த
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

0033695454893
0033652670400

(30663)(10.6.3)

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.06.2013 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

**திருமதி பாஸ்கரன் மதிவதனி**
(பாப்பா ரீச்சர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (09.07.2013) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
சந்தை அருகில், மல்லாகம்.
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

**சின்னையா தவரெட்ணம் J.P**



வடமாகாண கடற்றொழில் கூட்டமைப்புத்
தலைவரும், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்க சமாசங்களின்
முன்னாள் தலைவரும், எமது சங்க வளர்ச்
சிக்கு வழிகாட்டியாக இருந்தவருமான

**அமரர் சி.தவரெட்ணம்**

அவர்களின் மறைவால் துயரடைகின்றோம்,
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து,
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

**அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,**
**சுளிபுரம் மேற்கு.**

(30677) (6.3.11)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
07
01
1976

மறைவு
08
06
2013



## அமரர் சீவரத்தினம் தவசேகரன்

திதி:அமாவாசை

தனயனாய்த், தம்பியாய்க், கணவனாய்த், தந்தையாய்,
தக்கதோர் மந்திரியாய்த், தலையாய பணியாற்றித்
தவசேகரன் தோற்றம் தரணியிலே எமைவிட்டுத்
தணியாத தாகமாய்த் தொலைதூரம் சென்றதுவோ!

எண்ணித் தவித்தோம் எண்ணியதில் ஏது பயன்
எண்ணரிய மழலைகளும் மனையாளும் சுற்றமும்
கண்ணீரில் குளித்துக் கவலையால் மனமிருண்டு
மண்ணிலே வாழ்வதுவோ மாந்தரது வேறுயாறறிவார்

அன்னாரது வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 08.07.2013 திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார் த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
புன்னாலைக் கட்டுவன். (30687) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி தர்மலிங்கம் (தர்மு)



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் காக்கைதீவு, மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மலிங்கம் (தர்மு) 06.07.2013 கொழும்பில் காலமானார்.

அன்னார் திருமதி பரமேஸ்வரி (சின்னக்கிளி) யின் அன்புக் கணவரும், கிருபாகரன் (கிரி-UK), கிருசாந்தி(UK), கிருபாலினி (France), காலஞ்சென்ற பிரதீஸ்கரன் (தம்பி), கிருபாலோஜினி (கிருபா-UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனு (UK), மகேந்திரன் (UK), ஜெயகாந்தன் (France), விஜயன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலக்ஷி (UK), ஷேக்கா (UK), றொகான் (UK), றொஷெல் (UK), ஸ்டெபி (France), ஸ்டெப்பான் (France), சாம்சன் (France), சௌமியா (France), மிச்ஷேல் (UK) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லம் இல.33/9, 7 ஆம் ஒழுங்கை, காக்கைதீவு மட்டக்குளியிலிருந்து 09.07.2013 செவ்வாய்க்கிழமை பிற் பகல் 2 மணிக்கு நடைபெறும் ஆரா தனையின் பின்பு பிற்பகல் 3 மணிய ளவில் நல்லடக்கத்திற்காக பொரளை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Tel:011 252 4259
077 824 4813
(c/10277)(3.8.11)

தகவல்:
திருமதி பரமேஸ்வரி
தர்மலிங்கம்

## 6 மாதத்தில் 625 குழந்தைகளுக்கு 'சின்னம்மை'

கொழும்பு,ஜூலை 8

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 625 குழந்தைகள் சின்னம்மை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் குழந்தைகள் அனைவரும் ஆறு மாதங்களுக்கும் 12 மாதத்துக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் என்று அமைச்சின் தொற்று நோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேல் மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த குழந்தைகளே சின்னம்மையால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் இந்த நோய்த் தாக்கத் துக்கு இலக்கான 168 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.(ச)

# கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட கடற்
றொழிலாளர் கூட்டுறவுச்
சங்கங்களின் சம்மேளன முன்னாள்
தலைவரும் -வடபகுதி மீனவர்கள்
உயர்வுக்காய், தேசிய, சர்வதேச
ரீதியில் குரல் கொடுத்து
வாழ்ந்தவருமான எங்கள்

"கடல் அரசன்" .................. "மீனவ நண்பன்"

## சின்னையா தவரெட்ணம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு,
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
(30683)
(45.6.3)

நிர்வாகிகள், தொழிலாளர்கள்,
கிராமிய கடற்றொழிலாளர் கூ.சங்கம்
தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்
31
*
07
*
1934

மறைவு
08
*
06
*
2013



## அமரர் முருகேசு செல்லம்மா

கடந்த 08.06.2013 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின் 31ஆம் நாள் சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (08.07.2013) திங்கட்கிழமை நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்த னையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரணி, இயற்றாலை, வரணி. குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் முத்துவேலு சீவரத்தினம்

(ஓய்வு பெற்ற சந்தை மேற்பார்வையாளர், கரைச்சி பிரதேசசபை)



மண்ணில்
01
*
08
*
1936

விண்ணில்
08
*
06
*
2013

தந்தையாக, தாயாக – நல்
ஆசானாக, தோழனாக
எம்மையெல்லாம்
வழி நடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் பிரிவை ஏற்க
எங்கள் மனம் மறுக்கிறது
என்றும் உங்கள் நினைவுகளுடன்...
எங்களின் பயணம் தொடரும்...

இன்று (08.07.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைப்பதுடன் அன்னாரின் பிரிவைக் கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் ஏனைய உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

இல:56, கனகபுரம்,
கிளிநொச்சி.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் ஆராதனையும்



தோற்றம்
13-01-1940

மறைவு
09-06-2013

புங்குடுதீவு கிழக்கு 12ஆம்
வட்டாரத்தைப் பிறப்பிடமாக வும்
புதுக்குடியிருப்பு 2ஆம் வட்டாரம்
துர்க்கையம்மன் கோயிலடியை வசிப்
பிடமாகவும் கொண்ட

## தம்பி ஐயா விநாயகமூர்த்தி

அவர்களின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திக் கிரியைகள் நாளை (09-07-2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் இந் நிழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

2ம் வட்டாரம். கோம்பாவில்.
துர்க்கையம்மன் கோயிலடி. புதுக்குடியிருப்பு

குடும்பத்தினர்.

# பேரினவாத செயற்பாடுகள் அனைத்தும் திட்டமிட்டவை

## நீதி அமைச்சர் குற்றச்சாட்டு

கண்டி, ஜூலை 8

பேரினவாத செயற்பாடுகள் எல்லாம் தற்செயல் நிகழ்வல்ல. அனைத்தும் திட்டமிட்ட செயற்பாடுகள் என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

மடவளயில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் எட்டியும் எட்டாததுமான உறவே உள்ளது. ஆனால் கூட்டுப் பொறுப்பை என்னால் மீற முடியாது. இன்று பேரினவாதிகளால் முஸ்லிம்கள் மீது பல்வேறு அழுத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.



அதனை தந்திரோபாயமாக அணுக வேண்டும். மாறாக அரசை விட்டு வெளியேற முடியாது.

அவ்வாறு வெளியேறினால் அது பேரினவாதத்துக்கு உடந்தை ஆகிவிடும். கிழக்கு மாகாண சபை தேர்தலின் பின் கூட்டமைப்பினருடன் இணைந்து முதலமைச்சுப் பதவியை பெற்றிருக்க முடியும். எனினும் அது குறுகிய கால பதவியாகவே இருக்கும்.

நான் சமூகத்துக்காகவே அரசுடன் இணைந்துள்ளேன்- என்றார். (ச-10)

# புதையல் தேடிய மூவர் மாட்டினர்

கொழும்பு, ஜூலை 8

பன்னல - வெரலுகம, வல கும்புரமுல்ல பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட் டுக் கொண்டிருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



அவர்கள் சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து பன்னல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# வெளிநாட்டு ஊடகவியலாளர் மீது கண்காணிப்பு கடுமையாக்கப்படும்

கள் கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்த முயற்சித்துள்ளமையும் தெரிய வந்துள்ளது. எனவே இவ்வாறானவர்களால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும்.

இதனைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளிலிருந்து வரும் சகல ஊடகவியலாளர்களும் முழுமையாக விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னரே விசா வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படும் என கருதப்பட்டால் இறுதி நேரத்தில் கூட வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் விசாக்கள் இரத்து செய்யப்படக் கூடுமெனவும் அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ஐ)

### இந்திய அரசின் நிபந்தனைகளை சொல்ல மறுக்கிறார் பஸில்

பலவீனப்படுத்தும் தமது நடவடிக்கைகள் குறித்து இந்திய அரசுக்கு விளக்கும் முகமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது சிறப்புத் தூதுவராக பஸிலை புதுடில்லிக்கு அனுப்பியிருந்தார்.

தனது பயணத்தை முடித்து நாடு திரும்பிய பஸிலிடம் ஊடகங்கள் பயணம் குறித்து கேள்வி எழுப்பின.

அதற்கு 13வது திருத்தத்தை மாற்றுவது தொடர்பாக இந்தியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் குறித்து விளக்கமளிக்க அவர் மறுத்து விட்டார்.

பதிலாக,இந்தப் பயணத்தில் இரு நாடுகளுக்கு இடையிலும் எந்த உடன்பாடுகளும் எட்டப்படவில்லை. உடன்பாட்டை எட்டுவதற்கான அதிகாரமும் எனக்கு இல்லை. இது ஒரு தகவல் பரிமாற்றச் சந்திப்பே . அவர்கள் தமது கருத்தை கூறினர். நாம் எமது கருத்தைக் கூறினோம் என்று மழுப்பலான பதிலை மாத்திரமே அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

### இலங்கையின் சர்வாதிகாரத்தை பொதுநலவாயம் ஏற்கிறதா?

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிப்பதுடன் ஜனநாயக விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதில்லை. இந்த விடயங்கள் குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்த வேண்டும்.

நீதித்துறை சார் நியமனங்களும், இடமாற்றங்களும் அலரி மாளிகையின் உத்தரவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. ஊடகவியலாளர்கள் ஆபத்துக்களை சந்திக்கும் மிக மோசமான நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காம் இடத்தை வகிக்கிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒரு சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த கால அவகாசம் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என்ற போதிலும், பரிந்துரைகளை செயல்படுத்துவதில் அரசுக்கு அக்கறை இல்லை எனவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

# கூட்டமைப்பை இன்று சந்திப்பார் மேனன்

எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பில் இந்திய மத்திய அரசுடன் பேச்சு நடத்துவதற்காகக் கடந்த மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவொன்று புதுடில்லி சென்றிருந்தது.

அங்கு நடைபெற்ற சந்திப்பின்போது, '13' ஆவது திருத்தத் தில் இலங்கை அரசு திருத்தங்களை மேற்கொள்வதற்கு இந்தியா கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றது எனவும், தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்க இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது எனவும் தமிழ்க் கூட்டமைப்பினரிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தமது நிலைப்பாட்டை விரைவில் இலங்கை அரசிடம் நேரடியாகத் தெரிவிப்போம் என்றும் அவர் கூறியிருந்தார்.

இதற்கமையவே இந்தியப் பிரதமரின் முக்கிய செய்தியுடன் அந்நாட்டு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் இன்று இலங்கை வரவுள்ளார் என டில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை வரும் அவர், இன்று மாலை கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது, 13ஆவது திருத்த விவகாரம், வடமாகாண சபைத் தேர்தல் உட்படப் பல விடயங்கள் குறித்துப் பேசப்படவுள்ளன.

அதேவேளை, சிவ்சங்கர் மேனன் நாளை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதன்போது, 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்குகொழும்பு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை தொடர்பில் டில்லியின் நிலைப்பாட்டை அவர் அறிவிப்பார் என்றும் தகவலறிந்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அதாவது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி தமிழருக்குத் தீர்வைவழங்கஇலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகிறது எனவும் அவர் எடுத்துரைக்கவுள்ளார்.இதுவே மன்மோகனின் பதிலாக இருக்கும் எனவும் தெரியவருகிறது. (ங)

## மணி விழா



ஆசிரியர் திரு.கதிரவேலு கருணாநிதி

அவர்கள் தமது ஆசிரியர் சேவை, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், கணிதம் ஆகிய சேவைகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் அரும்பணி யாற்றி இறுதியாக எமது கிளி/ பளை றோ.க.த.க. பாடசாலை யில் தனது 60ஆவது வயதில் சேவையை 27.05.2013இல் நிறைவு செய்தமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கிளி/ பளை றோ.க.த.க. பாடசாலை.

## பிறந்தநாள் வாழ்த்து

இன்று 70ஆவது அகவையில் கால்பதிக்கும் எம் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஆசான்

நாகவேலு குழந்தைவேலு

அவர்கள் இறைஆசீர் பெற்று பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.






வாழ்த்துவோர்:
பா.மேரிசுகந்தினி,
பா.யூடிற்பாமினி (யாழ்.பல்கலை 4ஆம் வருட மாணவி)

## கடை வாடகைக்கு

திருநெல்வேலி
M.P.C.S
கட்டடத்துக்கு
அருகில் உள்ள
கடை
வாடகைக்கு
உண்டு.
தொடர்பு-
0773606835

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி சங்கத்தானை வைரவசுவாமி கந்த சுவாமி ஆலய பெருந்திருவிழாவில் இசை மழை பொழிந்த நாதஸ்வரப் பேரறிஞர் "கலாநிதி" கே.எம். பஞ்சாபிகேசன் அவர்களின் பேரர்களாகிய

விக்னேஸ்வரன் சித்தார்த்தன்
விக்னேஸ்வரன் பிரதித்தன்

ஆகியோருக்கு சங்கத்தானை வாழ் மக்களால் "நாதலய பாரிதிகள்" என்னும் பட்டமும், தங்கப்பதக்கமும் இன்று (08.07.2013) வழங்கப்படவுள்ளன.

பட்டமும் பதக்கமும் பெறும் இவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இ. பார்த்திபன்
அண்ணன்,
நாதஸ்வரவித்துவான்

## வேலையாள்கள் தேவை

கட்டட வேலைக்கு மேசன் மற்றும் கையுதவி வேலையாள்கள் தேவை.

தொடர்பு- 0721837801

## SHAMROCK 25yrs

ஈச்சமோட்டை, யாழ்.

C.ma-G.கண்ணன் (B.Sc)
Bio- R.குகனந்தன் (B.Sc)
Phy- S.சசி (B.Sc)
Che- M.A.நிரோஜன் (B.Sc)

A/L 2014, 2015 நடைபெறுகின்றன

## THE ROYAL COLLEGE OF JAFFNA

O/L, A/L, B.A மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் யாழ்ப்பாணம், சங்கானை.
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
தொ.பே. 077 675 1649

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை கமலாதேவி



யார்வத்தை, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கமலாதேவி 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து செல்லத்துரையின் அன்பு மனைவியும் இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் வைரமுத்து- செல்லாச் தம்பதியரின் அன்பு மருமகளும் வனஜா, மஞ்சுளா (ஆசிரியர், யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), வாசுகி (ஜேர்மனி), லோகதரன் (பிரான்ஸ்), கேசவராஜன் ஆகியோரின் அன்புத் தாயும் ஜெகதீஸ்வரன் (பண்ணாகம்), கேசவன் (யாழ். போதனா வைத்தியசாலை, ஊழியர்), விஜியன் (ஜேர்மனி), சர்மிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சகினா, நிவேதியன், கிசோன், சதுர்சன், கஜானனி, விகேஸ் (பிரான்ஸ்), கயல்விழி, நவீத் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசரத்தினம், தனபாலசிங்கம் மற்றும் பூபாலசிங்கம், சிவபாக்கியம், விவேகானந்தம், கனகமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.07.2013 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி/10282)

தகவல்:
யார்வத்தை, கோப்பாய் கிழக்கு, கோப்பாய்
குடும்பத்தினர்.

## கிரிக்கெட் ஆட்டம் நாளை

குருநகர், ஜூலை 8
அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் 15 வயதுப் பிரிவுக்கான கிரிக்கெட் சுற்றுப் தொடரில் நாளை 9 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன.
இந்த ஆட்டம் நெல்லியடி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ற-51)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை மின்னொளியில் இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
பி.ப. 7 மணி
பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.
இரவு 8 மணி
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம். (ற-23)

## வடமாகாண தடகளப் போட்டி வலயங்களின் புள்ளிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 6 ஆவது தடகளப்போட்டிகளில் வலயங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விவரங்கள் வருமாறு:-
வலிகாமம் - 369, யாழ்ப்பாணம் - 269, மன்னார் - 225, வவுனியா தெற்கு -212, வவுனியா வடக்கு 95, வடமராட்சி - 93, முல்லைத்தீவு- 89, துணுக்காய் - 62, கிளிநொச்சி - 56, தென்மராட்சி - 51, மடு-36, தீவகம்-20. (ற-23)

### பாடசாலைகளுக்கிடையான 15வயதுப் பிரிவு பூப்பந்தாட்டம்

# வவு. தமிழ் ம.வி, பரு. மெதடிஸ் சம்பியன்







யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாண பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு பூப்பந்தாட்டத் தொடரில் ஆடவர் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும், மகளிர் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் சம்பியனாகத் தெரிவாகின.
ஆடவர் பிரிவு
முதலாமிடம் - வவுனியாதமிழ் மத்திய மகா வித்தியாலயம்.
இரண்டாமிடம் - சென். ஜோன்ஸ் கல்லூரி.
மூன்றாமிடம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி.
மகளிர் பிரிவு
முதலாமிடம் - பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை.
இரண்டாமிடம் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
மூன்றாமிடம் - பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை. (ற-23)

# வடமாகாணத் தடகளப் போட்டி: பல புதிய சாதனைகள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் தடகளப் போட்டிகளின் மூன்றாம் நாளான நேற்றும் வீர, வீராங்கனைகளால் புதிய பல சாதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் கடந்த வருட சாதனையான 2.02 செக்கன் எனும் நேரப்பெறுதி, இம்முறை சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் அனோஜனால் முறியடிக்கப்பட்டது. குறித்த தூரத்தை 2.01


பிரசாத்


அமலதாஸ்

செக்கன் எனும் நேரப் பெறுதியில் ஓடி முடித்துப் புதிய சாதனையை அவர் பதிவு செய்தார்.
21 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தலில் கடந்த வருட சாதனையான 1.5 மீற்றர் தூரத்தை, இம்முறை உடுவில் மகளிர் கல்லூரி மாணவி கமலினி முறியடித்தார். அவர் 1.51 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.
21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் கடந்த வருடசாதனையான 52.2 செக்கன் என்ற நேரப் பெறுதி, இம்முறை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் பிரசாந்தால் முறியடிக்கப்பட்டது. அவர் 51.8 என்ற நேரப் பெறுதியில் குறித்த தூரத்தை ஓடி முடித்துப் புதிய சாதனையைப் பதிவு செய்தார்.
அத்துடன் 200 மீற்றர் ஓட்ட நிகழ்வில் கடந்த வருட சாதனையான 24 செக்கன் எனும் நேரப் பெறுதியை, பிரசாந் 24 செக்கன் எனும் நேரப் பெறுதியில் ஓடி முடித்து சாதனையைச் சமன்செய்தார்.
21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் கடந்த வருட சாத


அனேஷன்


கமலினிமில்க்ஸ்

னையான 52.6 செக்கன் என்ற நேரப்பெறுதி, இம்முறை வங்காலை சென். ஆன்ஸ் மகா வித்தியாலய மாணவன் அமலதாஸால் முறியடிக்கப்பட்டது. குறித்த தூரத்தை அவர் 51.9 செக்கன் என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.
அத்துடன், 200 மீற்றர் ஓட்டத்தில் கடந் வருட சாதனையான 24 செக்கன் என்ற நேரப் பெறுதியை இவர் 23.9 செக்கன் என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார். (ற-23)

## பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 6ஆவது தடகளப் போட்டிகளுக்களின் இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்களில் நடைபெறவுள்ளது. (ற-23)

## பிறந்தநாள் கொண்டாடினார் டோனி



இந்திய அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி நேற்றுத் தனது 32வது பிறந்த நாளை கொண்டாடினார்.
ராஞ்சியில் பிறந்த அவர் ரயில் டிக்கெட் பரிசோதகராக பணிபுரிந்த இவர் பின்னர் இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பிடித்தார்.
டோனியின் சிறப்பாட்டம் 'ஹெலிகாப்டர் ஷாட்' ஆகும். அவர் 'ஹெலிகாப்டர் ஷாட்' அடிப்பது ரசிகர்களின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. எந்த இக்கட்டான சூழலிலும் அமைதியாக இருப்பதால் டோனியை அனைவரும் 'கூல் கப்டன்' என்கின்றனர்.
2007ஆம் ஆண்டில் அணித் தலைவர் டோனி தலைமையிலான இந்திய அணி '20/20' உலகக் கிண்ணத்தை வென்றது. 1983ஆம் ஆண்டு கபில் தேவின் தலைமையில் இந்திய உலகக் கிண்ணத்தை வென்றது. அதன் பின்பு 2011ஆம் ஆண்டில் டோனியின் தலைமையில் இந்தியாவுக்கு உலகக் கிண்ணம் கிடைத்தது.
டோனிக்கு ஜூலை மாதம் மறக்க முடியாத மாதம் ஆகும். டோனிக்கும் அவரது பள்ளித்தோழியான சாக்ஷிக்கும் 2010ம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி நிச்சயம் நடந்தது.
2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதி டோனி, சாக்ஷியை மணந்தார். கடந்த 4ம் திகதி இருவரும் தங்களது 3ஆவது திருமண நாளை கொண்டாடினர்.
டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இரண்டு முறை ஐ.பி.எல் கிண்ணத்தை வென்றுள்ளது. அண்மையில் நடந்த சம்பியன்ஸ் கிண்ணத்தையும் இந்திய அணி டோனி தலைமையில் வென்றது.
டோனிக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டுள்ளதால் மேற்கிந்திய தீவுகளில் நடக்கும் முத்தரப்பு தொடரில் இருந்து அவர் விலகினார். டோனி காயம் அடைந்ததால் இந்திய அணியின் அணித்தலைவராக தற்போது வீராட் ஹோக்லி நியமிக்கப்பட்டுள்ளார். (ற)

# கொக்குவில் இந்துவை வீழ்த்தியது சென்றல்

குருநகர், ஜூலை 8
அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை 4 இலக்குகளால் வெற்றி கொண்டது யாழ்.மத்திய கல்லூரி.
இந்த ஆட்டம் கடந்தவாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 45.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.
கபிலன் 61 ஓட்டங்களையும், சஜீவன் 43 ஓட்டங்களையும், சந்தோஸ் 12 ஓட்டங்களையும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.
பந்துவீச்சில் மத்திய கல்லூரி அணி சார்பாக கௌதமன் 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், செந்தூரன் 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், கார்த்தீபன் 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தசோபன் 24 ஓட்டங்களை கொடுத்து ஓர் இலக்கையும், விதுஸன் 20 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
166 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி அணி 40 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.
நிசான் 36 ஓட்டங்களையும், கார்த்தீபன் 10 ஓட்டங்களையும், டினோஜன் 11 ஓட்டங்களையும், பிரியலக்ஸன் 42 ஓட்டங்களையும், செந்தூரன் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களையும் மத்திய கல்லூரி அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.




கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் பந்துவீச்சில் டிசாந்தன் 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், விதுஸன் 22 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் சாருஜன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஓர் இலக்கையும், சந்தோஸ் 11 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற-51)

## மைதானத்தில் மோதிய ரெய்னா–ஜடேஜா

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியின் போது, சுரேஷ் ரெய்னாவும்- ரவீந்திர ஜடேஜாவும் மைதானத்தில் மோதிக் கொண்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
போர்ட் ஆப்ஸ்பெயினில் இந்தியா- மேற்கு இந்தியத் தீவுகள் அணிகள் மோதிய ஆட்டத்தில் 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.
இந்நிலையில் அந்த ஆட்டத்தின்போது ஒரு பிடியைத் தவற விட்டமை தொடர்பாக ரெய்னாவுக்கும், ரவீந்திர ஜடேஜாவுக்கும் இடையே கடும்வாக்குவாதம் ஏற்பட்டது.
மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் சுனில் நரைன் விளையாடிக் கொண்டிருந்த போது, ஜடேஜா வீசிய பந்தில் ஆட்டமிழ்ந்தார். அதன் பிறகுதான் இந்தச் சண்டை நடந்துள்ளது.
நரைன் ஆட்டமிழந்த பின்னர் ரெய்னாவிடம் சென்ற ஜடேஜா, அதற்கு முன்பு தான் வீசிய பந்துப்பரிமாற்றத்தில் நரைன் கொடுத்த பிடியைத் தவற விட்டமை தொடர்பாக ஆவேசமாக பேசினார். அதற்கு ரெய்னாவும் பதிலளித்து சூடாகப் பேச நிலைமை மோசமானது.
இருவரும் கடுமையாக மோதிக் கொள்வதை பார்த்த அணித் தலைவர் வீராட் கோஹ்லி வேகமாக அருகில் சென்று ரெய்னாவை அமைதிப்படுத்தி ஜடேஜாவையும் விலக்கி விட்டார்.
எனினும் அவர்களின் கோபம் ரொம்ப நேரம் நீடிக்கவில்லை. கடைசி இலக்கு வீழ்த்தப்பட்ட பின்னர் ஜடேஜாவிடம் சென்ற ரெய்னா அவரது கழுத்தை தனது கையால் கட்டிக் கொண்டு பொறுமையாக பேசினார். அதன் பின்னர் இருவரும் சிரித்தபடியே பெவிலியன் திரும்பினர். (ற)

## உசைன் போல்ட் சாதனை

200 மீற்றர் தடகள ஓட்டத்தில் இவ்வாண்டின் சிறந்த காலப் பெறுதியை உலகில் அதிக வேக வீரரான ஜமைக்காவின் உசைன் போல்ட் பதிவு செய்துள்ளார்.
பரிஸில் நடைபெற்ற டயமன் லீக் 200 மீற்றர் ஓட்டத் தூரத்தை உசைன் போல்ட் 19.73 செக்கன்களில் கடந்தார்.
இந்த போட்டித் தூரத்தை 19.92 செக்கன்களில் கடந்த சக வீரரான ஜமைக்கா வின் வோரன் வெயர் இரண் டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.
பிரான்ஸ்சின் கிறிஸ்தோபர் லிமைய்ரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.
இது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ள 26 வயதான உசைன் போல்ட், தனது சில தவறுகளை சரி செய்ய வேண்டியுள்ளது என்றும் கூறியுள்ளார். (ற)



# விம்பிள்டன்: பர்டோலி சம்பியன்

விம்பிள்டன் 'ரென்னிஸ் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் பிரான்ஸின் மரியான் பர்டோலி சம்பியனாகத் தெரிவாகினார்.
இறுதியாட்டத்தில் பிரான்ஸின் மரியான் பர்டோலியும், ஜேர்மனின் சைபன் லிசிக்கியும் மோதிக் கொண்டனர்.
ஒரு மணி நேரம் 21 நிமிடங்கள் வரை நீடித்த இந்த ஆட்டததில் பர்டோலி 6:1, 6:4 என்ற நேர்செற்களில் வென்று முதல் முறையாக கிராண்ட் ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார்.
2007ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் போட்டியில் இறுதி வரை முன்னேறிய பர்டோலி, வீனஸ் வில்லியம்ஸிடம் தோல்வியடைந்தார். அப்போது பட்டத்தை நழுவவிட்ட பர்டோலி இந்த முறை பட்டம் வென்று சாதனை படைத்திருக்கிறார்.
பர்டோலி பட்டம் வென்றதன் மூலம், விம்பிள்டன் மற்றும் கிராண்ட்ஸ்லாம் தொடரில் 7 ஆண்டுக்கு பின் பட்டம் வென்ற பிரெஞ்ச் வீராங்கனை என்ற பெருமை பெற்றார்.
கடைசியாக 2006ஆம் ஆண்டு நடந்த ஆஸ்திரேலிய ஓபன் மற்றும் விம்பிள்டனில் பிரான்ஸின் அமெல்லி மவுரஸ்மோ சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.
இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற பர்டோலிக்கு, சம்பியன் பட்டத்துடன் ரூ. 33.5 கோடி பரிசு வழங்கப்பட்டது. தோல்வி அடைந்த லிசிக்கி ரூ. 24 கோடி பரிசு வழங்கப்பட்டது. (ற)

## கில் கிறிஸ்டின் புது அவதாரம்



பிக் பாஸ் '20/20' கிரிக்கெட் ஆட்டங்களுக்கான வர்ணனையாளர் குழுவில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட்டும் இணைந்து கொள்ளவுள்ளார்.
ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கிப் பொண்டிங் ஏற்கனவே இந்த குழுவில் இணைந்துள்ள நிலையில், தற்போது கில்கிறிஸ்ட்டும் அதில் இணையவுள்ளார்.
அடம் கில்கிறிஸ்ட் மற்றும் ரிக்கிப் பொண்டிங் ஆகியோருடன், உயர்மட்ட வர்ணனையாளர்களும் இந்தப் போட்டித் தொடரில் இணைந்து கொள்ளவுள்ளனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போது, பிக் பாஸ் கிரிக்கெட் தொடரில் இணைந்து கொள்வது மகிழ்ச்சி அளிக்கின்றது என்று தெரிவித்துள்ளார் கில்கிறிஸ்ட். (ற)

## பிராவோவுக்கு தடை



மும்முனைத் தொடரில் விளையாடிவரும் மேற்கிந்திய தீவுகள் அணியின் டுவைன் பிராவோவிற்கு போட்டியொன்றில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
12 மாத காலப் பகுதிகளுக்குள் இரண்டாவது முறையாக குறித்த நேரத்திற்குள் பந்துவீசத் தவறியமைக்காக அவருக்கு இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்திய அணிக்கெதிராக நடைபெற்ற இந்தப் போட்டியில் குறித்த நேரத்திற்குள் பந்துவீச தவறிய குற்றத்திற்காக டுவைன் பிரவோவிற்கு போட்டிக் கட்டணத்தில் 20 வீத அபாராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய வீரர்களுக்கு 10 வீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (ற)

# சிறந்த வீரருக்கான விருது சாமுவேல்ஸுக்கு

மேற்கிந்திய தீவுகளின் 2012 ஆம் ஆண்டின் ஒட்டு மொத்த மற்றும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த வீரர் ஆகிய விருதுகளுக்கு மார்லன் சாமுவெல்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் சபை மற்றும் மேற்கிந்திய தீவுகளின் கிரிகெட் வீரர்கள் சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் அவருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த வீரராக சிவ்நரேன் சந்தரபோல் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேற்கிந்திய தீவுகளின் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாக ஸ்ரிபனி டெய்லர் தெரிவாகியுள்ளார்.
அத்துடன் இலங்கையில் நடைபெற்ற உலக கிண்ண '20/20' கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்றெடுத்த 15 வீரர்களும், முகாமைத்துவ உறுப்பினர்களுக்கும் தங்க மோதிரங்கள் பரிசளிக்கப்பட்டுள்ளன.
'20/20' கிரிக்கெட் ஆட்டங்களில் சிறந்த வீரர் மற்றும் பிராந்திய மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்ற ஆட்டங்களில் சிறந்த வீரர் ஆகிய விருதுகளை சுனில் நரேன் வென்றெடுத்துள்ளார்.
ஆண்டின் வளர்ந்து வரும் வீரருக்கான விருதை சகலதுறைவீரர் கிரோன் பொலாட் பெற்றுக்கொண்டுள்ளார். (ற)



# இங்கிலாந்து தயார்

ஆஸி- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் ஒரு வருட இடைவெளிக்குப் பின், கிரஹம் ஒனியன்ஸ் இடம் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து–ஆஸ்திரேலியா அணிகள் மோதும் வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் ஜூலை 10ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 25ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி, ஜூலை 10 ஆம் திகதி நாட்டிங்ஹாமில் ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிக்கான 13 பேர் கொண்ட அணியை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

இதில், வேகப்பந்துவீச்சில் பலத்தை அதிகரிக்க கிரஹம் ஒனியன்ஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஒரு வருட இடைவெளிக்குப் பின்னர் அணியில் இடம் பிடித்த இவர், கடைசியாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் பர்மிங்ஹாமில் நடந்த மேற்கிந்தியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடியிருந்தார். முழங்கை காயத்தில் இருந்து மீண்டுள்ள சகலதுறை வீரர் டிம் பிரஸ்னன் அணியில் இடம் பிடித்துள்ளார். ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்டூவர்ட் பிராட், ஸ்டீவன் பின் உள்ளிட்ட வேகப்பந்து வீச்சாளர்களும் தங்களது இடத்தை தக்கவைத்துக் கொண்டனர்.

அணித்தலைவர் அலெஸ்டர் குக்குடன், ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்க ஜோ ரூட் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நிக் கொம்ப்டனுக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. கடந்த மார்ச் மாதம் முழங்கால் காயத்தால் பாதிக்கப்பட்ட நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன், மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார். சுழலில் அசத்த ஸ்வான் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



இங்கிலாந்து அணி: அலெஸ்டர் குக் (அணித்தலைவர்), ஜோ ரூட், ஜொனாதன் ட்ரொட், கெவின் பீற்றர்சன், இயன் பெல், ஜொனி பேர்ஸ்டோவ், மட் பிரையர் (இலக்குக் காப்பாளர்), ஸ்டூவர்ட் பிராட், ஸ்வான், ஸ்டீவன் பின், ஜேம்ஸ் அண்டர்சன், டிம் பிரஸ்னன், கிரஹம் ஒனியன்ஸ். (ங)

# ஐ.பி.எல். சூதாட்ட விவகாரம் ஹர்மித் சிங்குக்கும் தடை

கிரிக்கெட் சூதாட்ட தகவல்களை மறைத்த இளம் வீரர் ஹர்மித் சிங்கை, இந்தியக் கிரிக்கெட் சபை கிரிக்கெட் தொடர்பான விடயங்களில் இருந்து இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியன் பிரிமியர் கிரிக்கெட் தொடரில், சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான் அணியின் ஸ்ரீசாந்த், அங்கித் சவான் ஆகியோர் கைதாகி, இப்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சண்டிலா இன்னும் சிறையில் உள்ளார்.

இதனிடையே, இளம் சுழற்பந்து வீச்சாளர் ஹர்மித் சிங்கை(வயது-20) சூதாட்டத்தரகர்கள் அணுகிய விவகாரம் தற்போது வெளியாகியுள்ளது. இரண்டு முறை 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய இவர், கடந்த ஆண்டு ராஜஸ்தான் அணிக்காக விளையாடினார்.

இளம் வீரராக இருப்பதால், சூதாட்டம் செய்ய ஒத்து வரமாட்டார் என்று நினைத்த சூதாட்டத்தரகர்கள், ஹர்மித் சிங்கை விட்டுவிட்டனர். சூதாட்டம் குறித்த பொலிசாரின் விசாரணையில், ஹர்மித் சிங்கும் அரசதரப்பு சாட்சியாக மாறினார்.


ஆனால், இந்திய கிரிக்கெட் சபையின் விதிப்படி, சூதாட்டத்தரகர்கள் அணுகிய விவரத்தை, இவர் தெரிவிக்கவில்லை. இதனால், ஹர்மித் சிங்கை முழு விசாரணையும் முடியும் வரை, இந்திய கிரிக்கெட் சபை இடைக்காலத் தடை விதித்துள்ளது. (ங)

# இந்திய அணியில் முதல்முறையாக காஷ்மீர் வீரர்

ஸிம்பாப்வே தொடருக்கான இந்திய அணியில் இளம் சகலதுறை வீரர் பர்வேஸ் ரசூல் வாய்ப்பு பெற்றார். இதன் மூலம் இந்திய அணியில் இடம் பிடித்த முதல் காஷ்மீர் வீரர் என்ற வரலாறையும் அவர் படைத்தார்.

ரசூல் கடந்த வருடம் இங்கிலாந்துக்கெதிரான பயிற்சி போட்டிக்கான இந்திய 'ஏ' அணியில் இடம்பிடித்தார். இதில், அவ்வளவாக சோபிக்கவில்லை. இதன் பின், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பயிற்சி போட்டியில் 45 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை வீழ்த்தி அசத்தினார்.

கடந்த ஐ.பி.எல் தொடரில் புனே அணி சார்பில் விளையாடினார். பிரிமியர் தொடரில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சார்பில் பங்கேற்ற முதல் வீரர் இவர்தான்.



இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் பிஷன் சிங் பேடியிடம்தான், ரசூல் பயிற்சி பெற்றார்.

இது குறித்து பிஷன் சிங் கூறுகையில்,

கடவுள் கொடுத்த இந்த அரிய வாய்ப்பை ரசூல் முழுமையாக பயன்படுத்திக் கொள்வார். இந்திய அணியில் அஷ்வினுக்கு ரசூல் போட்டி இல்லை.

அஷ்வின் அவருக்குரிய தனித் திறமையுடன் விளையாடுகிறார். ரசூல் திறமையான சுழற்பந்துவீச்சாளர்- என்றார்.

> “
> கடவுள் கொடுத்த இந்த அரிய வாய்ப்பை ரசூல் முழுமையாக பயன்படுத்திக் கொள்வார். இந்திய அணியில் அஷ்வினுக்கு ரசூல் போட்டி இல்லை.

மேற்கிந்தியாவில் நடைபெறும் முத்தரப்பு தொடருக்குப் பின்னர், ஸிம்பாப்வே செல்லும் இந்திய அணி 5 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதற்கான 15 வீரர்கள் கொண்ட அணியை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயலாளர் சஞ்சய் படேல் அறிவித்தார். இதில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தொடையின் பின் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக முத்தரப்பு தொடரிலிருந்து வெளியேறிய அணித்தலைவர் டோனி ஸிம்பாப்வே தொடரில் இடம் பெறவில்லை. இதனால், அணியை கோஹ்லி தலைமையேற்று வழிநடத்தவுள்ளார். இஷாந்த் சர்மா, புவனேஷ்வர், உமேஷ், சுழற்பந்துவீச்சாளர் அஷ்வின் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. முத்தரப்பு தொடரில் சோபிக்காத முரளி விஜய் நீக்கப்பட்டுள்ளார்.

மோசமான ஆட்டத்திறன் காரணமாக நீக்கப்பட்ட சிரேஷ்ட வீரர்களான கம்பீர், ஷேவாக், சகீர் கான், பிரவீண் குமார் ஆகியோருக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. காயத்திலிருந்து மீண்டுள்ள புஜாரா, ரகானே அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அஷ்வினின் இடத்துக்கு காஷ்மீரைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் பர்வேஸ் ரசூல் மற்றும் சென்னை அணிக்காக விளையாடிய மோகித் சர்மா இடம்பெற்றுள்ளனர்.

ஸிம்பாப்வே தொடருக்கான இந்திய அணி:

கோஹ்லி (அணித்தலைவர்), ஷிகர் தவான், ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக், புஜாரா, ரெய்னா, ராயுடு, ரகானே, ஜடேஜா, அமித் மிஸ்ரா, பர்வேஸ் ரசூல், முகமது ஷமி, வினய் குமார், உன்த்கத், மோகித் சர்மா.

IMMEDIATE VACANCIES
@ ESOFT
The Leader in Professional ICT Education

**Lecturer in IT (Full Time)**
✓ Degree/equivalent Qualification in IT (BIT/B.Sc in IT)
✓ Excellent teaching and Communication Skills.
✓ Ability to teach degree and higher diploma levels.
✓ Attractive Remuneration Package and Lecture Fee

**Lecturer in Business Management ( Full Time)**
✓ Degree/equivalent Qualification in Business Management
✓ Excellent teaching and Communication Skills.
✓ Ability to teach degree and higher diploma levels.
✓ Attractive Remuneration Package and Lecture Fee

**Lecturer in English ( Full Time / Visiting)**
✓ Degree/equivalent Qualification in English
✓ Excellent teaching and Communication Skills.
✓ Ability to work weekends and conduct evening Classes.
✓ Ability to teach IELTS, City and Guilds and Diploma Programs.

**HOW TO APPLY**
Send your CV within 07 Days to reach The Manager. Mark the position that you are applying for on the top left corner of the Envelope. (Reg - Post Only)

**ESOFT METRO CAMPUS -JAFFNA**
No.137, K.K.S Road Jaffna | www.esoft.lk
Tel :021 750 1120 | E-Mail : jaffna@esoft.lk | 077 3099308

IELTS A1 B1 B2 KU Education
Quick Preparation Available Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

**தேவை**
அலுவலகம் ஒன்றுக்கு
கணினி தரவு இயக்குநர்
தேவை.
தொடர்பு:
0777283759
(30879)

**அலுவலகத் தளபாடங்கள் விற்பனைக்கு**
யாழ். நகரிலுள்ள முன்னணி நிறுவனம் ஒன்று நவீனமயப்படுத்தப்பட்டதால் அதன் சில காலம் பாவித்த கணினி மேசை, Revolving Chairs, அலுவலக மேசைகள், Excecutive chairs, Lecture chairs நியாயமான விலையில் விற்பனைக்குண்டு.
021 7904941
(38557)
(10,7,16)

**வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்**
வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிறி
G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும்.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு: Type <BIT><your name> & send to 772 395 895

**கல்வியியற் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களுக்கு**
ஒலிம்பியா ஸ்போட்ஸின் வாழ்த்துக்கள்
உங்களுக்குத் தேவையான Bottom, T.Shirt, Shoe, Cap போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
**ஒலிம்பியா ஸ்போட்ஸ்**
இல.06, ஜும்மா பள்ளி வாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0212223490, 0778060267
(30655)
(10,6,3)

**கொரியாவில் படிக்க உழைக்க சட்ட ஆலோசனை மாதாந்தம் 2½ இலட்சம் சம்பாதிக்கலாம். 2 வாரங்களில் பயணம்**
★ 4 வருட விசா
★ வயது 47இற்குக் கீழ்
★ ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்
(மூவருக்கு மட்டுமே வாய்ப்பு)
சனி, ஞாயிறு உட்பட
ஏழு நாள்களும் திறந்திருக்கும்.
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090(30654)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.